# குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் கொள்கை 2008

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை
தமிழ்நாடு அரசு

| வரிசை | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 1 | **அறிமுகம்** | 1 |
| | **தொலைநோக்குப் பார்வை, குறிக்கோள், நோக்கங்கள் மற்றும் செயல்முறை உத்திகள்** | 1 |
| | **தொலைநோக்குப் பார்வை** | 1 |
| | **குறிக்கோள்** | 2 |
| | **நோக்கங்கள்** | 2 |
| | **செயல்முறை உத்திகள்** | 3 |
| 2 | **பின்னணி** | 4 |
| 3 | **குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் கொள்கையின் தேவை** | 6 |
| 4 | **கொள்கை சார் நடவடிக்கைகள்** | 8 |
| | 4.1 **அடிப்படை கட்டமைப்பு வசதி அளித்தல்** | 8 |
| | **4.1.1** ஏற்கனவே இயங்கி வரும் தொழிற்பேட்டைகளை மேம்படுத்துதல் | 8 |
| | **4.1.2** புதிய தொழிற்பேட்டைகள் நிறுவுதல் | 9 |
| | **4.1.3** அடுக்குமாடி தொழிற்பேட்டைகளை அமைத்தல் | 9 |
| | **4.1.4** பத்திரப் பதிவு கட்டண சலுகை | 9 |
| | **4.1.5** தனியார் துறையில் மேம்படுத்தப்படும் தொழிற்பேட்டைகள் | 9 |
| | **4.1.6** மூலப்பொருள் வினியோகம் | 10 |
| 5 | **நேரடி ஊக்குவிப்பு மானிய உதவிகள்** | 10 |
| | 5.1 **குறு உற்பத்தி நிறுவனங்களுக்கான உதவிகள்** | 10 |
| | **5.1.1** மூலதன மானியம் | 10 |
| | **5.1.2** குறைந்த அழுத்த மின் மானியம் | 11 |
| | **5.1.3** மதிப்பு கூட்டு வரிக்கு ஈடான மானியம் | 11 |
| | **5.1.4** முத்திரை கட்டண விலக்கு | 11 |
| | 5.2 **பின்தங்கிய பகுதிகளில் அமைக்கப்படும் குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்களுக்கான உதவிகள்** | 11 |
| | **5.2.1** மூலதன மானியம் | 12 |
| | **5.2.2** வேலைவாய்ப்பு பெருக்க மானியம் | 12 |
| | **5.2.3** குறிப்பிட்ட வகை தொழில் முனைவோர்க்கான கூடுதல் மூலதன மானியம் | 12 |
| | **5.2.4** மாசற்ற மற்றும் சுற்றுச் சூழலுக்கு இயைந்த தொழில் நுட்பத்திற்கான கூடுதல் மூலதன மானியம் | 12 |
| | **5.2.5** குறைந்த அழுத்த மின் மானியம் | 12 |
| | **5.2.6** வேளாண் சார் உற்பத்தி நிறுவனங்கள் அமைக்க மானிய உதவிகள் | 12 |
| | 5.3 **சிறப்பு வகை உற்பத்தி நிறுவனங்களுக்கான மூலதன மானியம்** | 13 |
| | 5.4 **மூலதனமானியம் பெற தகுதியில்லாத நிறுவனங்கள் / தொழில்கள்** | 13 |
| | 5.5 **ஏற்றுமதியை ஊக்குவிக்க தனி கொள்கை** | 14 |
| 6 | **தொழில் நுட்ப ஆதரவு** | 15 |
| | 6.1 **தொழில் நுட்ப மற்றும் திறன் மேம்பாடு மற்றும் நவீனப்படுத்தலுக்கான உதவி** | 15 |
| | **6.1.1** சிறு கருவி மையங்கள் | 15 |

6.1.2 உற்பத்தி நிறுவனங்களின் போட்டியிடும் திறமையை அதிகரித்தல் 15
6.1.3 தொழில் குழும மேம்பாட்டுத் திட்டம் 16
6.1.4 பின்முனை வட்டி மானியம் 16
6.1.5 தொழில் நுட்ப வளர்ச்சி நிதி 17
6.1.6 தொழில் நுட்ப வணிக சேவை வசதி வளர்ப்பகங்கள் 17
6.1.7 அறிவுசார் சொத்துரிமைக்கான மானிய உதவி 17
6.1.8 குறிப்பிட்ட வகை தொழில்களுக்கான தொழில் நுட்ப மேம்பாட்டு திட்டம் 18
6.2 **சான்றளித்தல் மற்றும் பரிசோதனை** 18
6.3 **செயல்திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி** 18

7 **தகவல் மற்றும் சந்தை ஆதரவு** 19
7.1 **சந்தைப்படுத்துதலுக்கான ஆதரவு, கருத்தரங்குகள் மற்றும் பொருட்காட்சிகள்** 19

8 **கட்டுப்பாடுகள் நீக்கம் மற்றும் எளிதாக்குதல்** 21
8.1 **பொது விண்ணப்ப படிவம்** 21
8.2 **சுய சான்றளிக்கும் வசதி** 21
8.3 **தொழிற்சாலைகளை துவங்குவதற்கான ஒற்றைச்சாளர தீர்வு சட்டம்** 21

9 **நிருவாக சீரமைப்பு** 22
9.1 **தொழில் வணிகத் துறையின் நிருவாக அமைப்பைச் சீரமைத்தல்** 22
9.2 **வர்த்தகம் மற்றும் தொழில் நுட்ப தகவல்களை ஒருங்கிணைத்தல்** 22
9.3 **குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் கொள்கையில் அளிக்கப்படும் மானியங்கள் மற்றும் ஊக்குதவி திட்டங்களை நிருவகித்தல்** 23
9.4 **குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான வாரியம் அமைத்தல்** 23

10 **கொள்கை செயல்படுத்துதலைக் கண்காணித்தல்** 24
10.1 **அதிகாரம் பெற்ற குழு** 24

**இணைப்பு 1**

**நலிவுற்ற குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை புனரமைக்கும் கொள்கை** 26

**இணைப்பு 2 (அ)**

**ஒப்புதல் அளிக்கப்பட்ட தொழில் பூங்காவின் முக்கிய அம்சங்கள்** 33

**இணைப்பு 2 (ஆ)**

**அங்கீகரிக்கப்பட்ட அடிப்படைக் கட்டமைப்பு பற்றிய பட்டியல்** 34

**இணைப்பு 3**

**மாநிலத்தில் உள்ள பின்தங்கிய வட்டாரங்கள்** 35

**இணைப்பு 4**

**மானியம் பெற தகுதியில்லாத நிறுவனங்கள் / தொழில்கள்** 40

# குறு, சிறு, மற்றும் நடுத்தர தொழில் கொள்கை – 2008

## 1. அறிமுகம்

தொழில் வளர்ச்சியைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு, நன்கு வளர்ச்சியடைந்த மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. தாராளமயமாக்கலுக்குப் பின்னர், பெருமளவிலான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்ப்பதில் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக இம்மாநிலம் உருவெடுத்துள்ளது. 2006–2007 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டின் மொத்த மாநில உற்பத்தி மதிப்பில் பொருட்கள் உற்பத்தித் துறை 20.23 விழுக்காடும், சேவைகள் துறை 59.1 விழுக்காடும் ஈட்டித் தந்துள்ளது. (நிலையான விலை அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது). தொழில் மேம்பாட்டை மேலும் ஊக்குவித்தல், முதலீடுகளை ஈர்த்தல், புதிய தயாரிப்பு திறனுக்கு ஊக்கமளித்தல், உலகத் தரம் வாய்ந்த தயாரிப்புத் தகுதி அடைவதற்கும் சந்தை போட்டித் திறனை வளர்ப்பதற்கும் உள்நாட்டு தொழில்களின் திறனை மேம்படுத்த உதவுதல், ஆகிய நோக்கங்களோடு அரசு "புதிய தொழில் கொள்கை 2007" ஐ 5.11.2007 அன்று வெளியிட்டுள்ளது.

உலகெங்கிலுமுள்ள வளர்ச்சி அடைந்த நாடுகள் உள்ளிட்ட அனைத்து நாடுகளிலும், சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு தனி கவனம் மற்றும் சிறப்பு உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. அனைத்து தொழில் நிறுவனங்களும் சந்தித்து வரும் பொதுவான சவால்கள் மற்றும் பிரச்சனைகள் புதிய தொழில் கொள்கையில் இடம் பெற்றுள்ள போதிலும், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் சில தனிப்பட்ட இடர்பாடுகளை சந்தித்து வருவதால் இப் பிரிவுக்கு சிறப்பு கவனம் தேவைப்படுகிறது. அரசு 2006–07ஆம் ஆண்டின் சிறு தொழில் துறைக்கான மானியக் கோரிக்கையின் போது, "குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம், 2006" க்கு இணங்க, சிறு தொழில் துறையினருடன் கலந்தாலோசித்து குறு மற்றும் சிறு தொழில் வளர்ச்சிக்காக கொள்கை வகுக்கப்படும் என அறிவித்துள்ளது.

## தொலை நோக்குப்பார்வை, குறிக்கோள், நோக்கங்கள் மற்றும் செயல் முறை உத்திகள்

### தொலை நோக்குப்பார்வை

- தமிழ்நாட்டிலுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் போட்டியிடும் திறமையை அதிகரிக்கச் செய்து அவற்றின் செயல் திறனை படிப்படியாக மேம்படுத்துதல்.
- மதிப்பு கூடுதலை அதிகப்படுத்தவும், விவசாயிகளுக்கு நல்ல வருமானம் கிடைத்திடவும், வேளாண்சார்ந்த தொழில்களை ஊக்குவித்தல்.
- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் ஆண்டு வளர்ச்சி விகிதத்தை 10 விழுக்காட்டிற்கும் அதிகமாக இலக்கு நிர்ணயம் செய்தல்.
- பதினோராவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 10 இலட்சம் பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்.

## குறிக்கோள்

**குறிக்கோள்**

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனித ஆற்றல் இவற்றை மேம்படுத்துவதன் மூலமாக முதலீடுகள், உற்பத்தி வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் உற்பத்தியில் போட்டியிடும் திறன் ஆகியவற்றை அதிகரிக்கச் செய்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை விரைவு படுத்துவது இக் கொள்கையின் குறிக்கோள் ஆகும்.

## நோக்கங்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் கொள்கையின் நோக்கங்கள் கீழ் வருமாறு :

- மாநிலத்திலுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு புத்துயிர் அளித்து அவை உலக வர்த்தக நிறுவன ஒப்பந்தத்தையொட்டிய பன்னாட்டுச் சந்தையில் போட்டியிடுமளவிற்கும் குறிப்பிட்ட தொழிற் பிரிவுகளில் உலகளவில் முதன்மையிடத்தினை அடையவும் உதவுதல்.
- மாநிலத்தில் மண்டலங்களுக்கிடையே தொழில் வளர்ச்சியில் நிலவி வரும் ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கும் நோக்குடன், பின் தங்கிய பகுதிகளில் குறு , சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை அமைப்பதற்கு வசதி செய்தல்.
- தாராளமயமாக்கல் மற்றும் உலக மயமாக்குதலால் பாரம்பரிய தொழிற் பிரிவுகளில் ஏற்பட்டுள்ள போட்டியினை எதிர்கொள்ளும் நோக்குடன் அவற்றின் தொழில் நுட்பத்தினை மேம்படுத்துதல் மற்றும் நவீனப்படுத்துதல்.
- சமுதாயத்தில் குறிப்பாக பின் தங்கிய பிரிவு மக்கள் மற்றும் கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கி உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதி செய்தல்.
- படித்த இளைஞர்களுக்கு தொழிற் பயிற்சி மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சிகளை அளித்து அதன் மூலம் அவர்களை சுய தொழில் செய்ய ஊக்குவித்தல்.
- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு தேவையான கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், மானிய உதவிகள் மற்றும் சலுகைகள் அளித்தல், சந்தைப்படுத்துதல் மற்றும் தொழில் நுட்ப உதவிகளை அளித்தல்.
- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து தொழில் நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்களின் தரப்பரிசோதனைக்குத் தேவையான உதவிகளை வழங்குதல்.
- வழிமுறைகளை எளிதாக்கி தொழில் மயமாக்கலை துரிதப்படுத்துதல்.

**செயல் முறை உத்திகள்**

- அரசுத்துறை மூலம் தொழிற்பேட்டைகள் மற்றும் கட்டமைப்பு வசதிகளை அமைத்தல் மற்றும் அவற்றை மேம்படுத்துதல். தனியார் மற்றும் அரசுத் துறை – தனியார் கூட்டு முயற்சி மூலமாக தொழிற்பேட்டைகளை அமைக்க ஊக்கமளித்தல்.
- மத்திய அரசின் குழுமவளர்ச்சித் திட்டங்களில் மாநில அரசும் இணைந்து தொழிற் கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகளை உருவாக்குதல்.
- தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளில் நிறுவப்படும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கும் விவசாயம் சார்ந்த தொழில்கள், ஜவ்வரிசி (சேகோ), தேயிலை, கயிறு முதலிய குறிப்பிட்ட தொழில் உட்பிரிவுகளுக்கும் மானிய உதவி வழங்குதல்.
- முன்னணி தொழில்களை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு தமிழ்நாட்டில் எப்பகுதியிலும் நிறுவப்படும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு சிறப்பு முதலீட்டு மானிய உதவி வழங்குதல்.
- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் தொழில் நுட்பத்தினை மேம்படுத்துதல் மற்றும் நவீனப்படுத்துதலுக்கு பின்முனை வட்டி மானிய உதவி அளித்தல் .
- தொழில் நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டு பயிற்சி மற்றும் அவர்களுடைய தொழிற் தேவைகளுக்கு ஏற்றார் போல தொழில் திறன் மேம்பாட்டு பயிற்சித் திட்டங்கள் ஏற்பாடு செய்தல்
- பல்வேறு அரசு திட்டங்களின் செயல்பாடுகளைப் பற்றிய மதிப்பீடு செய்தல், தனியார் அமைப்புடன் சேர்ந்து நடைமுறைகளை தொடர்ந்து ஆய்வு செய்து எளிமையாக்குதல் மற்றும் வழிமுறைகளை சீரமைத்தல்.
- குறு நிறுவனங்களின் தேவைக்கேற்ப விரைவாக கடன் உதவி கிடைக்க உதவுதல் மற்றும் கடன் உத்திரவாத நிதி நிறுவனத் திட்டத்தின் பயனை குறு நிறுவனங்களின் அனைத்து கடன் தேவைகளுக்கும் விரிவாக்கம் செய்தல்.
- அரசு மூலம் வழங்கப்படும் பல்வேறு வகையான வளர்ச்சி திட்டங்கள் மற்றும் சலுகைகள் குறித்து தகவல் வழங்குதல்.
- குறைந்த விலையில் சுற்றுசூழலுக்கு பாதுகாப்பான தொழில் நுட்பங்களை கையாளும் நிறுவனங்களுக்கு சலுகைகள் வழங்குதல்.
- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் ஆரம்ப நிலையிலுள்ள நலிவினை குறைத்தல் மற்றும் நலிவுற்ற நிறுவனங்களை புனரமைத்தல்.

- தொழில் நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு இவற்றிக்கிடையேயான கூட்டுமுயற்சியின் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறையில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மேற்கொள்ளல், புதிய தொழில் முயற்சிகளை ஊக்குவித்தல் மற்றும் தொழில் நுட்பங்களை பரவலாக்குதல்.
- ஒற்றைச் சாளர தீர்வு முறை மூலம் தொழில் நிறுவனங்களை அமைப்பதற்கான விதிகள் மற்றும் வழிமுறைகளை எளிதாக்குதல் மற்றும் துரிதப் படுத்தல்.

## 2. பின்னணி

சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் பற்றிய வரையறையானது முதலீடு, வேலை வாய்ப்பு, விற்பனை மற்றும் வரவு செலவு ஆகிய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காரணிகளின் அடிப்படையில் நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் உலகெங்கும் தொழில் வளர்ச்சியின் உந்து சக்தியாக விளங்குகின்றன. விரிவாகக் கூறின், உலகளவில் மொத்த உற்பத்தி நிறுவனங்களின் எண்ணிக்கையில் 90 விழுக்காடு இப்பிரிவில் அடங்குவதோடு அவை 80 விழுக்காட்டிற்கும் மேலாக தொழில் சார்ந்த வேலை வாய்ப்புகளை அளிக்கின்றன.

இந்திய அரசால் தொழில் நிறுவனங்களின் இயந்திரம் மற்றும் தளவாடங்களின் முதலீட்டு மதிப்பு, சிறு தொழில் நிறுவனங்களை வரையறை செய்யும் அளவுகோலாக பின்பற்றப்படுகிறது. இப்பிரிவு மேலும் வளர்ச்சியடையும் பொருட்டு 1960ம் ஆண்டில் ரூ.5.00 இலட்சமாக இருந்த சிறு தொழில்களின் இயந்திரம் மற்றும் தளவாடங்களின் முதலீட்டு உச்சவரம்பு படிப்படியாக உயர்த்தப்பட்டு 2006ம் ஆண்டில் ரூ. 500 இலட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சிறு தொழில் பிரிவினரின் நீண்ட நாளைய கோரிக்கைக்கு இசைந்தும், உலகளவில் **"சிறு மற்றும் நடுத்தர நிறுவனம்"** என அறியப்படும் இப்பிரிவின் வளர்ச்சிக்கான சட்ட பூர்வ அங்கீகாரம் வழங்குவதின் தேவையை கருத்தில் கொண்டும் இந்திய அரசு சமீபத்தில் **குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம் – 2006** ஐ இயற்றியதன் மூலம் ''சிறு தொழில் பிரிவு'' என்பது ''குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன பிரிவு'' என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இதன் மூலம் நிறுவனப்பிரிவுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டதோடு நடுத்தர தொழில் நிறுவனங்களும் இப்பிரிவின் கீழ் கொண்டு வரப் பட்டது. இச்சட்டத்தின் முக்கிய சிறப்பு அம்சங்கள் பின்வருமாறு :

- இச்சட்டம் சேவைப்பிரிவிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் நோக்கத்தோடு தொழில் என்பதனை நிறுவனம் என வரையறை செய்கிறது.
- உற்பத்தி நிறுவனங்கள் அவற்றின் இயந்திரம் மற்றும் தளவாடங்களின் முதலீட்டு மதிப்பின் (நிலம் மற்றும் கட்டிடங்களின் மதிப்பு நீங்கலாக) அடிப்படையில் கீழ்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளன.

குறு உற்பத்தி நிறுவனங்கள் – ரூ. 25 இலட்சம் வரை

சிறு உற்பத்தி நிறுவனங்கள் – ரூ. 25 இலட்சத்திற்கு மேல் ரூ.5 கோடி வரை

நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள் – ரூ. 5 கோடிக்கு மேல் ரூ.10 கோடி வரை

➢ சேவை நிறுவனங்கள் அவற்றின் உபகரணங்களின் முதலீட்டு மதிப்பின் (நிலம் மற்றும் கட்டிடங்களின் மதிப்பு நீங்கலாக) அடிப்படையில் கீழ்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளன.

குறு சேவை நிறுவனங்கள் – ரூ. 10 இலட்சம் வரை

சிறு சேவை நிறுவனங்கள் – ரூ. 10 இலட்சத்திற்கு மேல் ரூ.2 கோடி வரை

நடுத்தர சேவை நிறுவனங்கள் – ரூ. 2 கோடிக்கு மேல் ரூ.5 கோடிவரை

பரவலான தொழில் ஆதாரங்களுடன் கூடிய தமிழ்நாடு, நம் தேசத்தின் மிகவும் தொழில் வளர்ச்சியடைந்த மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்ந்து வருகிறது. தொழில் உற்பத்தி, மதிப்புக் கூட்டுதல், தொழிற்சாலைகளின் எண்ணிக்கை மற்றும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் எண்ணிக்கை ஆகியவற்றின் தர வரிசைப் பட்டியலில் தமிழ்நாடு, நாட்டில் முதன் மூன்று மாநிலங்களில் ஒன்றாக விளங்குகிறது. இந்நாட்டின் சிமெண்ட், சர்க்கரை, துணி நூல், தோல், வேதிப் பொருட்கள் மற்றும் உரம், தானியங்கி ஊர்திகள் மற்றும் இலகுரக பொறியியல் சாதனங்கள் ஆகியவற்றின் உற்பத்தியில் இம்மாநிலம் பெரும் பங்கு வகிக்கிறது. இம்மாநிலத்தின் தற்போதைய தொழில் வளர்ச்சியை உருவாக்கியதில் போக்குவரத்து, தகவல் தொடர்பு மற்றும் இதர அடிப்படைக் கட்டுமான ஆதாரங்களான தொழிற்பேட்டைகள், வங்கி வசதிகள், நிதிச்சேவைகள், மனித வளம் ஆகியவற்றின் பங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

தமிழ்நாட்டில் தொழில் மயமாக்கல் மற்றும் தொழில் வளர்ச்சி தொடர்பான நடவடிக்கைகளில் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் ஆதரவு நல்குகின்றன. மேலும், அத்தகைய பெருமளவு ஆதரவை நடுத்தர மற்றும் பெருந் தொழில் நிறுவனங்களும் அளிக்கின்றன. மாநில பொருளாதாரத்தில் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் பொருட்கள் உற்பத்தி ஆகியவற்றில் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் பங்கு முக்கியமானதாகவும், இன்றியமையாததாகவும் உள்ளது. குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள், நம் நாட்டின் மொத்த உற்பத்தி நிறுவனங்களின் எண்ணிக்கையில் 95 விழுக்காடு அளவிலும், பொருள் உற்பத்திப் பிரிவின் உற்பத்தியில் 40 விழுக்காடு அளவிலும் ஏற்றுமதியில் 35 விழுக்காடு அளவிலும் பங்கு வகிக்கின்றன. 31.3.2007 அன்றைய நிலவரப்படி, தமிழ்நாட்டில் சுமார் 5.30 இலட்சம் பதிவு பெற்ற குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் சுமார் 16817 கோடி ரூபாய் முதலீட்டில் இயங்குவதுடன், அவை சுமார் 37 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கியுள்ளன. குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள், வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த தொழில்களுக்கு அடுத்தபடியாக வேலை வாய்ப்புகளை உருவாக்குவதால், ஊரக மற்றும் பின்தங்கிய பகுதிகளில் "துரிதமான தொழில் வளர்ச்சி" மற்றும் "அதிகப்படியான திறன்

மிகு வேலை வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தல்" ஆகிய இரட்டை நோக்கங்களை அடைய குறு மற்றும் சிறு தொழில்கள் சக்தி வாய்ந்த உந்து சக்தியாக உள்ளன. மேலும், தமிழகத்தில் உள்ள 6 லட்சத்திற்கும் அதிகமான பதிவு பெறாத தொழில் நிறுவனங்கள் தொழில் முனைவோர் பண்புகளை உருவாக்கும் நாற்றங்கால்களாக பின்னணியிலிருந்து செயல்பட்டு வருகின்றன.

## 3. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் கொள்கையின் தேவை

உலகமயமாக்கல் மற்றும் அதைத் தொடர்ந்த பொருளாதார சீர்திருத்தம் ஆகியவற்றின் விளைவாக குறு , சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் சந்திக்கும் சவால்கள் மற்றும் வாய்ப்புகள் பன்மடங்கு அதிகரித்துள்ளன. வர்த்தகத் தடைகள் குறைப்பு, தகவல் தொழில் நுட்ப முன்னேற்றம் மற்றும் தகவல் பரிமாற்ற வசதி ஆகிய காரணங்களால் தொழில் நிறுவனங்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களையும், சேவைகளையும் உலகில் எப்பகுதியில் இருந்தும் மலிவான விலையில் திறன்மிகு ஆதாரங்கள் மூலம் பெற்றுக் கொள்ள முடிகிறது. உலகமயமாக்கல் மற்றும், அதைத் தொடர்ந்து சந்தையில் நிலவும் போட்டி அதிகரித்திருப்பதை கருத்திற் கொண்டு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான கொள்கைகள் வகுக்கப்படல் வேண்டும். மாறிவரும் சூழ்நிலைக்கேற்ப குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தம்மை தயார் படுத்திகொள்ளல் அவசியமாகிறது.

உலகளாவிய நடைமுறைகள் இந்தியச் சந்தைகளை அடைந்து உள்ளதால் குறு , சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களிடமிருந்து உயரிய அளவு தொழில் நுட்ப துல்லியம் எதிர் பார்க்கப்படுகிறது. இவ்வாறான, வேகமாகவும் துரிதமாகவும் ஏற்படும் நடைமுறை மாற்றங்கள் காரணமாக, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை தனிமைப்படுத்திப் பார்க்க வேண்டியது அவசியமாகிறது. தங்கள் உற்பத்தித் தரத்தை மேம்படுத்துவதன் மூலம் குறு , சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் ஏற்றுமதி மேற்கொள்ளவும் வழி ஏற்பட்டுள்ளது. சந்தையில் நிலவும் போட்டியை சமாளிக்க குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தொடர்ச்சியாக தமது தொழில் நுட்பத்தை மேம்படுத்துவதும், மூலதனத்தை அதிகரிப்பதும் அவசியமாகிறது. அரசின் கொள்கைகள் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் காலப்போக்கில் நடுத்தர மற்றும் பெரிய தொழில் நிறுவனங்காக மாறுவதற்கு உறுதுணை புரிய வேண்டும். அவ்வாறு மாற்றம் செய்யப் படும் போது குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கே உரித்தான வேலைவாய்ப்பு அதிகமுள்ள நடைமுறை உத்திகள் தக்க வைக்கப்பட வேண்டும்.

உலக மயமாக்கலைத் தொடர்ந்து நம் நாட்டில் தரம் குறைந்த பொருட்கள் அதிக அளவில் சந்தைப்படுத்தப்பட வாய்ப்பு உள்ளது. எனவே, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் களுக்கான அடிப்படைக் கொள்கை நோக்கமானது போட்டிகளை சமாளிக்க உதவுவதோடு வேலை வாய்ப்புகளை அதிகப்படுத்துதல் ஆகவும் இருத்தல் வேண்டும். இந்நிலையில் அரசு தொழில்

நிறுவனங்களுக்கு ஒரு உகந்த சூழலை உருவாக்குவதோடு அரசின் தொழிற் கொள்கைகள் அரசை ஒரு வசதி அளிக்கும் மற்றும் ஊக்குவிக்கும் அமைப்பாக வரையறை செய்தல் கட்டாயமாகிறது.

அரசின் உதவிகள் இம்முயற்சியில் போட்டியை எதிர்கொள்ள வலிமை படைத்த தொழில் உட்பிரிவுகளை உத்வேகப்படுத்தும் விதமாகவும் மாற்றங்களுக்கு ஈடு கொடுக்க முடியாத அல்லது செயல்படவே சிரமப்படும் இதர பிரிவுகளுக்கு மானியங்களுடன் தேவையான ஆதரவு வழங்கும் விதமாகவும் இருத்தல் வேண்டும். அதாவது, ஒரு நாட்டில் தொழிலாளர் இடப்பெயர்வுக்கான வாய்ப்பு குறைவாக இருக்கும் போதும், திறன் குறைவு மற்றும் திறன் உயர்வு துரித விகிதத்தில் நிகழும் போதும், பெரிய அளவில் தொழிலாளர்களை ஈடுபடுத்தி குண்டூசி முதல் விமான பாகங்கள் வரையிலான பலவகை பொருட்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களை, வலுவான பாரம்பரியமிக்க தொழில் பிரிவுகள் மற்றும் நவீன கால வளர்ந்து வரும் தொழில் பிரிவுகளோடு பொருத்திப் பார்த்தல் இயலாது. மிகவும் வளர்ச்சி அடைந்த நாடுகள் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு ஆக்கப் பூர்வமான சந்தை ஆதரவு அளித்து வருவதோடு, தொழில் நுட்ப மேம்பாடு, திறன் வளர்ச்சி மற்றும் ஒருங்கிணைப்பு ஆகிய வசதிகளை செய்து கொடுப்பதற்கு வலுவான ஆதரவு முறைகளையும் அளித்து வருவதால் இங்கும் இவ்வாறாக செயல்பட வேண்டியது அத்தியாவசியமாகும்.

சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை பொறுத்த வரையில் போட்டியினை சமாளிக்கும் திறனை மேம்படுத்துவதோடு பெருந்தொழில் நிறுவனங்களின் கொள்முதல் பிரிவில் அங்கம் வகித்தல் ஆகியவை முக்கியத்துவம் பெறுகிறது. குறு தொழில்களை பொறுத்தவரை சந்தை வாய்ப்பு, தொழில் நுட்ப மேம்பாடு, வடிவமைப்பு மற்றும் உற்பத்தியில் தேக்கநிலை ஏற்படுவதை சமாளித்தல் ஆகியவை முக்கியமான சவால்களாக விளங்குகின்றன. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தமக்கு தேவையான அதி நவீன தொழில் நுட்பங்கள், உள்நாட்டு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி உதவி, புதிய உத்திகள் ஆகியவற்றை எளிதில் பெறுவதை ஊக்குவிப்பதோடு இதற்கான கட்டமைப்புகளையும் மேம்படுத்தல் வேண்டும். அரசு, தொழில் ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனங்கள் இவற்றிற்கிடையிலான கூட்டு முயற்சியை ஊக்குவிப்பதோடு அதன் மூலம் தொழில் நிறுவனங்களின் திறன் மேம்பாட்டிற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். தொழில் நிறுவனங்கள் புதிய தொழில் நுட்பங்களில் முதலீடு செய்வதற்கு தேவைப்படும் கடனுதவி எளிதாகவும், குறைந்த வட்டிவீதத்திலும் கிடைக்கப்பெற வழிவகை செய்யப்பட வேண்டும்.

இந்திய நாட்டைப் போன்ற தொழிலாளர் எண்ணிக்கை அதிகமுள்ள பொருளாதார சூழ்நிலையில் வேலைவாய்ப்பை அதிகப்படுத்தும் வகையில் கொள்கைகள் மற்றும் திட்டங்களின் தேவை அதி முக்கியம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. இனிவரும் காலங்களில் நாட்டில் வளர்ந்து வரும் முக்கிய சுமையான நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பை அதிகரிக்கும் பொறுப்பை, தொழில் உற்பத்தி நிறுவனங்கள் எதிர் கொள்ள வேண்டியுள்ளது. இதில் கிராமப்புற மற்றும் விவசாயம்

சார்ந்த குடும்பங்களிலிருந்து வரும் வேலைவாய்ப்பற்ற பிரிவினரும் அடங்குவர். தொழில் உற்பத்தி நிறுவனங்களின் வளர்ச்சி விவசாயம் சார்ந்த தொழில்களுக்கு பேருதவியாக விளங்குகிறது. மேலும், இது சேவை சார்ந்த தொழில்களான பாரம்பரிய வியாபாரம், நிதி நிறுவன சேவை, போக்குவரத்து ஆகிய பிரிவுகளில் பன்மடங்கு வளர்ச்சியினை உருவாக்குகிறது. இதன் காரணமாக தொழில் துறையில் வளர்ச்சியால் ஏற்படும் ஒட்டுமொத்த வேலைவாய்ப்பு, சேவைசார் தொழில்களில் ஏற்படும் மறைமுக வேலைவாய்ப்பினையும் உள்ளடக்கியதாக விளங்கும். மேலும், தொழில் துறை சார்ந்த சேவைசார் பிரிவுகள் மற்றும் உட்பிரிவுகள் அதிக வேலைவாய்ப்பு வழங்குவதால் இப்பிரிவுகளையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும். எனவே, தொழில் துறையின் அதிவேக வளர்ச்சியை ஊக்குவித்தல் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு பெருக்கத்தினை ஏற்படுத்தும்.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தமிழ் நாட்டின் மொத்த உற்பத்தி நிறுவனங்களின் எண்ணிக்கை, பொருட்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி ஆகியவற்றில் கணிசமான பங்கு வகிப்பதோடு வேளாண் மற்றும் வேளாண் சார் தொழில்களுக்கு அடுத்தபடியாக அதிக அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதாலும், இப்பிரிவினை மேம்படுத்துவது முக்கியமானதாக கருதப்படுகிறது. மேலும், தமிழ்நாட்டிலுள்ள குறு மற்றும் சிறுதொழில்களுக்கான சங்கங்கள், குறு மற்றும் சிறுதொழில்களுக்காக தனியான கொள்கையினை வெளியிடும்படி அரசை வலியுறுத்தி வந்தன. இதன் வெளிப்பாடாக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கான பிரத்யேக கொள்கையினை அரசு வெளியிட முன்வந்துள்ளது.

வளர்ச்சிக்குத் திட்டமிடும்போது, நலிவுற்ற தொழில் நிறுவனங்களின் தேவைகளை காலத்தே கண்டறிந்து, உரிய கவனம் செலுத்தி அவற்றில் ஈடுபடுத்தப்பட்டுள்ள நிதி மற்றும் பிற ஆதாரங்களை பயனுள்ளதாக மாற்றியமைக்கும் வகையில் போதுமான கவனம் செலுத்தப்படல் வேண்டும். இதற்கு வகை செய்யும் நோக்குடன் இது தொடர்பாக கடைப்பிடிக்க வேண்டிய கட்டுக்கோப்பான அணுகுமுறை பற்றி விவரங்கள் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் கொள்கையின் **இணைப்பு–1** ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## 4. கொள்கை சார் நடவடிக்கைகள்

### 4.1 அடிப்படை கட்டமைப்பு வசதி அளித்தல் :

#### 4.1.1 ஏற்கனவே இயங்கி வரும் தொழிற்பேட்டைகளை மேம்படுத்துதல்

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ), தொழில் வணிகத்துறை மற்றும் தொழில் கூட்டுறவு பிரிவு இவற்றின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து தொழிற்பேட்டைகளின் அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

### 4.1.2 புதிய தொழிற்பேட்டைகள் நிறுவுதல்

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) மேற்கொள்ளும் புதிய தொழிற்பேட்டை அமைத்தல் மற்றும் ஏற்கனவே உள்ள தொழிற்பேட்டைகளை விரிவாக்கம் செய்யும் திட்டங்களில், மனை அளவில் 20 விழுக்காடு நிலத்தை குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு துணைத் தொழில்களை தொடங்க ஒதுக்கீடு செய்யும். 11வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சிட்கோ மேம்படுத்தும் தொழிற்பேட்டைகளில் 30 விழுக்காடு பரப்பளவு நிலம், குறுந்தொழில் நிறுவனம் ஒன்றிற்கு 15 சென்ட் அளவுக்கு மிகாமல் ஒதுக்கீடு செய்யப்படும். தேவையைப் பொறுத்து 10 தொழிற்பேட்டைகள் பசுமைப்பகுதி எனப்படும் புதிய தொழில்கள் அல்லது ஏற்கனவே இயங்கிவரும் தொழிற்பேட்டைகளை விரிவாக்கம் செய்தல் மூலமாக அமைக்கப்படும். இதில் பதினோராவது திட்ட காலத்தில், மாதவரம் (திருவள்ளூர் மாவட்டம்), விண்ணமங்கலம் (வேலூர் மாவட்டம்), பர்கூர் (கிருஷ்ணகிரி மாவட்டம்) மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் தகுந்த இடத்தில் அமைக்கப்படும் குறு பிரிவுக்கான தனி தொழிற்பேட்டைகளும் அடங்கும்.

### 4.1.3 அடுக்குமாடி தொழிற்பேட்டைகளை அமைத்தல்

சென்னை மாநகரின் மையப் பகுதியிலிருந்து 25 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் குறு உற்பத்தி நிறுவனங்களுக்காக பிரத்யேகமாக அடுக்குமாடி தொழிற்பேட்டைகள் சிட்கோ மூலம் உருவாக்கப்படும். இத்திட்டங்கள் தொடங்கப்பட்டு 2010ஆம் ஆண்டுக்குள் முடிக்கப்படும்.

தொழிற்பேட்டைகளில் தொழிற் கூடங்களை அமைக்க விதிகள் தளர்த்தப்பட்டு தளப்பரப்பளவு குறியீடு 1.5 முதல் 1.75 வரையிலும் அடுக்குமாடி தொழிற் பேட்டைகள் அமைக்க அதிகபட்சமாக 2.5 வரையிலும் அனுமதிக்கப்படும்.

### 4.1.4. பத்திரப் பதிவு கட்டண சலுகை

சிட்கோ அல்லது அரசு மேம்படுத்தும் தொழிற்பேட்டைகளில் நிறுவப்படும் குறு மற்றும் சிறு தொழில்களுக்கு தொழிற்கூடங்களுக்கான முதல் ஒதுக்கீட்டின்போது சிட்கோ அல்லது அரசு அத்தகைய தொழிற்பேட்டைகளுக்கு நிர்ணயம் செய்யும் நில மாற்று மதிப்பின் மீது 50 விழுக்காடு முத்திரைக் கட்டணம் மற்றும் பத்திரப் பதிவுக் கட்டண தள்ளுபடிச் சலுகை வழங்கப்படும். பின் தங்கிய வட்டாரங்களில் அமைக்கப்படும் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு 50 விழுக்காடு முத்திரைக் கட்டணம் மற்றும் பத்திரப் பதிவுக் கட்டண தள்ளுபடி சலுகை உற்பத்தி துவங்கிய பின்னர் திருப்பித் தரப்படும்.

### 4.1.5. தனியார் துறையில் மேம்படுத்தப்படும் தொழிற்பேட்டைகள்

- சென்னை நகரின் மையப்பகுதியிலிருந்து 30 கிலோ மீட்டருக்கு அப்பால் தனியார் துறை மூலம் தொழிற்பேட்டைகள் அமைக்கப்படுவதை அரசு ஊக்குவிக்கும். அவ்வாறான

தொழிற்பேட்டைகளுக்கு ஒப்புதல் வழங்குவது குறித்த நிபந்தனைகள் **இணைப்பு–2** ல் கொடுக்கப்பட்டுள்ளன.

- 50 ஏக்கர் மற்றும் அதற்கு அதிகமான பரப்பளவில் அமையும் அத்தகைய ஒப்புதல் பெற்ற தனியார் தொழிற்பேட்டைகளுக்கு மாநிலஅரசு வழங்கும் அடிப்படைக் கட்டமைப்பு மானியம், ஒப்புதல் பெற்ற அடிப்படைக் கட்டமைப்பு இனங்களில் 20 விழுக்காடு, அதிகபட்சம் ஒரு தொழிற்பேட்டைக்கு ரூ.1 கோடி என்ற அளவுக்கு இருக்கும்.
- அத்தகைய தொழிற்பேட்டை உருவாக்குவதில் உருவாக்குபவரின் பங்கு 40 விழுக்காட்டிற்கு குறையாமல் இருக்கும் நோக்கத்துடன் மாநில அரசின் மானியம் குறைக்கப்படும் என்ற நிபந்தனையுடன் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மைய அரசிடமிருந்து மானியம் பெற தடை ஏதும் இல்லை.
- தனியார் மேம்படுத்தும் அத்தகைய தொழிற்பேட்டைகளில் தொழில் தொடங்கும் தொழில் முனைவோர், மூல ஒதுக்கீட்டின்போது உள்ள வழிகாட்டு மதிப்பின்படி நில மதிப்பிற்கான முத்திரைக்கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணத்தில் 50 விழுக்காடு தள்ளுபடி பெறத் தகுதியுடையவராவார்.
- இத்திட்டத்திற்குத் தேவையான நிலத்திற்கான எற்பாடுகளை தனியார் தொழிற்பேட்டை தொடங்குபவரே செய்து கொள்ள வேண்டும்.
- தொழிற்பேட்டைக்கு தடையில்லாத மின்வழங்கலை உறுதிப்படுத்த தமிழ்நாடு மின்சார வாரியம் தன் செலவில் தொழிற்சாலைகளுக்கான மின் ஊட்டிகளை ஏற்படுத்தும்.

### 4.1.6. மூலப்பொருள் வினியோகம்

குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்குத் தேவையுள்ள அத்தியாவசிய மூலப்பொருட்கள் கிடைப்பதை ஒழுங்குபடுத்தும் பணியை வாய்ப்புள்ள இடங்களில் பொதுத்துறை – தனியார் கூட்டு முயற்சி அடிப்படையில் அமைக்க சிட்கோ நடவடிக்கை மேற்கொள்ளும்.

## 5. நேரடி ஊக்குவிப்பு மானிய உதவிகள்

### 5.1 குறு உற்பத்தி நிறுவனங்களுக்கான உதவிகள்

மாநிலத்தில் எப்பகுதியில் அமைக்கப்படும் அனைத்து குறு உற்பத்தி நிறுவனங்களுக்கும் கீழ்கண்ட சலுகைகள் வழங்கப்படும்.

### 5.1.1. மூலதன மானியம்

குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம் 2006 மற்றும் விதிகளில் குறிப்பிடப் பட்டுள்ள தகுதியான இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களின் மதிப்பில் 15 விழுக்காடு முதலீட்டு மானியம் வழங்கப்படும்.

### 5.1.2. குறைந்த அழுத்த மின்மானியம்

மாவட்ட தொழில் மையம் மூலம் வழங்கப்படும் தொழில் முனைவோர் பதிவறிக்கை எண் (பகுதி 2) ஒதுக்கப்பட்ட நிறுவனங்களுக்கு, உற்பத்தி துவங்கிய நாள் அல்லது மின் இணைப்பு பெற்ற நாள் இவற்றில் எது பிந்தியுள்ளதோ, அந்நாளிலிருந்து முதல் 36 மாதங்களுக்கு 20 விழுக்காடு என்ற வீதத்தில் குறைந்த அழுத்த மின் மானியம் வழங்கப்படும்.

### 5.1.3. மதிப்பு கூட்டு வரிக்கு ஈடான மானியம்

குறு உற்பத்தி நிறுவனங்களுக்கு, உற்பத்தி தொடங்கிய முதல் ஆறு ஆண்டுகளில் செலுத்தப்படும் மதிப்பு கூட்டு வரிக்கு ஈடான தொகை மானியமாக மாவட்ட தொழில் மையம் மூலம் வழங்கப்படும். இம் மானியத் தொகை குறு உற்பத்தி நிறுவனங்கள் மாவட்ட தொழில் மையத்தில் தொழில் முனைவோர் பதிவறிக்கை (பகுதி–2) க்கான எண் ஒதுக்கீடு செய்யும் பொழுது உள்ள தகுதியான இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களின் மதிப்பின் அடிப்படையில் கணக்கிடப்படும். இது குறித்து தனியாக வெளியிடப்படும் வழிகாட்டுதல்கள் மற்றும் விதிமுறைகளின் அடிப்படையில் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் மூலம் இம்மானியம் வழங்கப்படும்.

### 5.1.4. முத்திரை கட்டண விலக்கு

(வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெறவதற்காக) அடமானம் வைக்கப்பட்ட (அல்லது) பிணையமாக வைக்கப்பட்ட ஆவணங்களை பதிவு செய்வதற்கான முத்திரைக் கட்டணம் செலுத்துவதிலிருந்து குறு உற்பத்தி நிறுவனங்களுக்கு விலக்கு அளிக்கப்படும்.

## 5.2 பின்தங்கிய பகுதிகளில் அமைக்கப்படும் குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்களுக்கான உதவிகள்

**இணைப்பு 3**ல் குறிப்பிடப்பட்டுள்ள அரசால் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளாக கண்டறிப்பட்டுள்ள 251 வட்டாரங்கள் மற்றும் அரசு மற்றும் அரசு நிறுவனங்களான சிப்காட், சிட்கோ, ஆகியவை உருவாக்கும் தொழிற்பேட்டைகளில் (சென்னை நகரின் மையப்பகுதியிலிருந்து 50 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள்ளே அமைந்துள்ள தொழிற் பேட்டைகள் தவிர்த்து) அமைக்கப்படும் குறு ,சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்களுக்கு கீழ்க்கண்ட மூலதன மானிய உதவிகள் வழங்கப்படும். இந்த தொழிற் கொள்கைப்படி உற்பத்தி நிறுவனங்களில் கூலி அடிப்படையில் பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள், பதப்படுத்தும் பணி மற்றும் மூலப்பொருட்கள் / உற்பத்திபொருட்கள் மற்றும் உப பொருட்கள் ஆகியவற்றை எடுத்துச் செல்லும் (பணிகளடங்கிய) நிறுவனங்களும் அடங்கும். இச்சலுகைகள் ஏற்கனவே இயங்கி வரும் நிறுவனங்களில் குறிப்பிடத்தக்க அளவில் செய்யப்படும் உற்பத்தி அதிகரிப்பு மற்றும் உற்பத்தி இன மாற்றம் இவற்றிற்கும், அதிகப்படியாக செய்யப்படும் முதலீட்டின் அடிப்படையில் வழங்கப்படும்.

### 5.2.1. மூலதன மானியம்

குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம் 2006 மற்றும் விதிகளில் குறிப்பிடப் பட்டுள்ள தகுதியான இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களின் மதிப்பில் 15 விழுக்காடு, அதிக பட்சமாக ரூபாய் 30 லட்சம் வரை, முதலீட்டு மானியம் வழங்கப்படும்.

### 5.2.2. வேலைவாய்ப்பு பெருக்க மானியம்

உற்பத்தி தொடங்கிய 5 ஆண்டுகளில் மூன்று ஆண்டுகள், குறைந்தபட்சம் 25 வேலையாட்களை பணியில் ஈடுபடுத்தும் நிறுவனங்களுக்கு கூடுதலாக 5 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.5 லட்சம் வரை, வேலைவாய்ப்பு பெருக்க மானியமாக வழங்கப்படும். வருங்கால வைப்பு நிதிச் சட்டம் போன்ற சட்டங்களின்படி சமர்ப்பிக்கப்படும் சட்டபூர்வ விவர அறிக்கைகள், குறிப்பிட்ட அளவு பணியாளர்கள் நிறுவனத்தில் வேலையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனரா என்பதற்கு ஆதாரமாக எடுத்துக் கொள்ளப்படும்.

### 5.2.3. குறிப்பிட்ட வகை தொழில் முனைவோர்க்கான கூடுதல் மூலதன மானியம்

மகளிர், பட்டியலிடப்பட்ட இனம் / பட்டியலிடப்பட்ட பழங்குடியினர், உடல் ஊனமுற்றோர் மற்றும் அரவாணிகள் ஆகியோர் தொழில் முனைவோராக இருக்கும் நேர்வுகளில் 5 விழுக்காடு, அதிக பட்சமாக ரூ.2 லட்சம் வரை, கூடுதல் மூலதன மானியமாக வழங்கப்படும்.

### 5.2.4. மாசற்ற மற்றும் சுற்றுச்சூழலுக்கு இயைந்த தொழில் நுட்பத்திற்கான கூடுதல் மூலதன மானியம்

மாசற்ற மற்றும் சுற்றுக்சூழலுக்கு இயைந்த தொழில் நுட்பத்தை பயன்படுத்தும் நிறுவனங்களுக்கு, அதற்காக சுற்றுப்புறத் துாய்மையினை காக்கும் கருவிகள் நிறுவப் பட்டுள்ளன என தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் சான்றளிப்பதன் அடிப்படையில் நிறுவப்பட்ட குறிப்பிட்ட இயந்திர தளவாடங்களின் மதிப்பில் 25 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.3 இலட்சம் வரை, கூடுதல் முதலீட்டு மானியமாக வழங்கப்படும்.

### 5.2.5. குறைந்த அழுத்த மின்மானியம்

மாவட்ட தொழில் மையம் மூலம் வழங்கப்படும் தொழில் முனைவோர் பதிவறிக்கை எண் (பகுதி 2) ஒதுக்கப்பட்ட நிறுவனங்களுக்கு, உற்பத்தி துவங்கிய நாள் அல்லது மின் இணைப்பு பெற்ற நாள் இவற்றில் எது பிந்தியுள்ளதோ, அந்நாளிலிருந்து முதல் 36 மாதங்களுக்கு 20 விழுக்காடு என்ற வீதத்தில் குறைந்த அழுத்த மின் மானியம் வழங்கப்படும்.

### 5.2.6. வேளாண் சார் உற்பத்தி நிறுவனங்கள் அமைக்க மானிய உதவிகள்

அரசு, அரசாணை (நிலை) எண்.32 சிறு தொழில் துறை, நாள் 28.6.2002 இல் ஒப்பளிக்கப்பட்ட 385 வட்டாரங்களில் அமைக்கப்படும் வேளாண் சார் உற்பத்தி நிறுவனங்களுக்கு மானியம்

வழங்கும் திட்டம், இவ்வாண்டு முதல் செயல்படுத்தப்பட உள்ள தொழிலில் பின்தங்கியுள்ள வட்டாரங்களுக்கு மானியம் வழங்கும் திட்டத்துடன் இணைக்க அரசு முடிவெடுத்துள்ளது. அதற்கிணங்க, பத்தி எண். 5.2.1. முதல் 5.2.5 வரை குறிப்பிடப்பட்டுள்ள மானியங்கள் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து வட்டாரங்களிலும் அமைக்கப்படும் வேளாண் சார் உற்பத்தி நிறுவனங்களுக்கும் விரிவு படுத்தப்படும்.

### 5.3. சிறப்பு வகை உற்பத்தி நிறுவனங்களுக்கான மூலதன மானியம்

தமிழ்நாட்டில் எப்பகுதியிலும் அமைக்கப்படும் கீழ்கண்ட சிறப்பு வகை உற்பத்தி இனங்களில் ஈடுபட்டுள்ள குறு ,சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்களுக்கு, குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம் 2006, மற்றும் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதியான இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களின் மதிப்பில் 15 விழுக்காடு, அதிக பட்சமாக ரூபாய் 30 லட்சம் வரை, சிறப்பு முதலீட்டு மானியம் வழங்கப்படும்.

1. மின் மற்றும் மின்னணு பொருட்கள்
2. தோல் மற்றும் தோல் பொருட்கள்
3. வாகன உதிரி பாகங்கள்
4. மருந்து மற்றும் மருந்து பொருட்கள்
5. சூரிய சக்தி பயன்பாட்டு உபகரணங்கள்
6. ஏற்றுமதிக்கான தங்கம் மற்றும் வைர நகைகள்
7. மாசுக்கட்டுப்பாடு உபகரணங்கள்
8. விளையாட்டு பொருட்கள் மற்றும் உபகரணங்கள்
9. சிக்கன கட்டுமான பொருட்கள்
10. ஆயத்த ஆடைகள் தயாரிப்பு
11. அரசால் அவ்வப்போது அறிவிக்கப்படும் பிற தொழில் இனங்கள்.

இச்சலுகை ஏற்கனவே இயங்கி வரும் நிறுவனங்களின் குறிப்பிட தக்க அளவில் செய்யப்படும் உற்பத்தி அதிகரிப்பு மற்றும் உற்பத்தி இன மாற்றம் இவற்றுக்கும் பொருந்தும்.

### 5.4. மூலதனமானியம் பெற தகுதியில்லாத நிறுவனங்கள் / தொழில்கள்

மேற்கண்ட பத்தி எண். 5.1.1. முதல் 5.3. வரை குறிப்பிட்டுள்ள மானிய உதவிகளுக்கு கீழ்கண்ட இனங்கள் தகுதி பெறாது.

அ. உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்ட பழைய இயந்திரங்கள் (எனினும் நாட்டின் முதன்முறையாக இறக்குமதி செய்யப்பட்டு குறைந்த பட்சம் 5 ஆண்டுகள் இயங்கும் நிலையிலுள்ள இயந்திரங்கள், இது குறித்து பட்டய பொறியாளரிடமிருந்து பெறும் சான்றின் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்படும்).

ஆ. மைய அரசு அல்லது மாநில அரசுகளின் இதர மானிய திட்டங்களின் கீழ் வழங்கப்படும் மானியம் பெறுகின்ற நிறுவனங்களுக்கு இக்கொள்கையின் கீழ் அதிகப்படியான மானியத்தொகை மட்டுமே வழங்கப்படும்.

இ. சிறப்பு பொருளாதார மண்டலங்கள் மற்றும் சிறப்பு மண்டலங்களில் அமைக்கப்படும் நிறுவனங்கள், சிறப்பு நிதிப்பயன் மற்றும் சிறப்பு ஊக்க உதவி திட்டங்கள் மூலம் பயன் பெறும் நிறுவனங்களாக இருப்பின், அவை பின்தங்கிய வட்டாரங்கள் என அறிவிக்கப்பட்ட பகுதிகளில் அமைந்திருந்தாலும் இக்கொள்கைப்படி மாநில அரசு வழங்கும் மூலதன அல்லது குறைந்த அழுத்த மின்மானியம் பெற தகுதி பெறாது.

ஈ. சிறப்பு மூலதனமானியம் பெறும் நிறுவனங்களுக்கு எண். 5.2.2.ல் இருந்து 5.2.5 வரையுள்ள பத்திகளில் குறிப்பிட்ட இதர மானியங்கள் வழங்கப்படமாட்டாது. எனினும் இந்த நிபந்தனை பின்தங்கிய வட்டாரங்களில் அமையப் பெறும் சிறப்பு மூலதன மானியம் பெறும் நிறுவனங்களுக்கு பொருந்தாது.

உ. பத்தி எண். 5.1.1. மற்றும் 5.1.2.ல் குறிப்பிடப்பட்டுள்ள குறு உற்பத்தி நிறுவனங்களுக்கான சலுகைகள் மற்றும் பத்தி எண்.5.2.1. முதல் 5.2.5. வரை குறிப்பிடப்பட்டுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்களுக்கான சலுகைகள் **இணைப்பு 4** ல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள்/ தொழில்களுக்கு பொருந்தாது.

### 5.5. ஏற்றுமதியை ஊக்குவிக்க தனி கொள்கை

புதிய தொழில் கொள்கை 2007 இல் ஏற்கனவே குறிப்பிட்டுள்ள கீழ்க்கண்ட அறிவிப்புகளின்படி இம்மாநிலத்தின் தொழில் மற்றும் பொருளாதார முன்னேற்றத்தில் ஏற்றுமதியின் முக்கிய பங்கை கருத்தில் கொண்டு அரசு, ஏற்றுமதியை ஊக்குவிக்க ஒரு தனி கொள்கையை அறிவிக்கும்.

(1) பல்வேறு மாநிலத் துறைகள் மற்றும் மைய அரசுடன் ஒருங்கிணைந்து செயல்படவும், கூடுதலான ஏற்றுமதி மேம்பாடு, ஏற்றுமதிக்கான வசதிகள் செய்யவும், ஏற்றுமதிக்கான வழிமுறைகள் அமைக்கவும் மற்றும் ஏற்றுமதி ஆவணங்களை தயாரித்தல் ஆகியவற்றை எளிமைப்படுத்துவதற்காகவும், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரின் பணி, மாநில ஏற்றுமதி ஆணையர் ஆகவும் விரிவாக்கப்பட்டுள்ளது.

(2) இந்திய ஏற்றுமதி நிறுவனங்களின் கூட்டமைப்பின் ஒத்துழைப்புடன் ஏற்கனவே ஒவ்வொரு மாவட்டத் தொழில் மையத்திலும் செயல்பட்டு வரும் ஏற்றுமதி மேம்பாட்டு பிரிவு பலப்படுத்தப்படும். இந்த ஏற்பாட்டு முறை, ஏற்றுமதியாளர்களுக்கு தேவைப்படக்கூடிய பல்வேறு அனுமதிகளை விரைவாகப் பெற உதவியாக இருக்கும்.

(3) இந்திய ஏற்றுமதி நிறுவனங்களின் கூட்டமைப்புடன் இணைந்து தொழில் வணிகத்துறை இயக்குநரகம் மூலம், அனைத்து மாவட்டத் தொழில் மையங்களிலும் இணையதள இணைப்பு வசதிகளுடன் கூடிய விரிவான வர்த்தகத் தகவல் வலைவாசல் அமைக்கப்படும்.

மேற்கூறிய நோக்கங்களை அடையும் பொருட்டு, தொழில் வணிக இயக்குநரகம் மற்றும் அனைத்து மாவட்டத் தொழில் மையங்களின் கட்டமைப்பு வசதிகள், செய்தி மற்றும் தகவல் தொழில் நுட்ப சாதனங்கள், இணையதளத் தொடர்பு, பயன்பாட்டு மென்பொருள், இணையதள தகவல் பரிமாற்ற சேவை ஆகியவை இணைக்கப்படும் வகையில் உயர்த்தப்படும்.

இது தவிர, போட்டிமிகு உலக அரங்கில், குறு ,சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர்கள் தங்களுடைய போட்டியிடும் திறனை மேம்படுத்திக் கொள்ளவும் தங்களது திறனை நிலைநிறுத்திக் கொள்ளவும் தேவையான வசதிகளை அளிக்கும் பொருட்டு, இயக்குநரகத்திலும் மற்றும் மாவட்டத் தொழில் மையங்களிலும் உள்ள அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு, தற்போதைய கணினி பயன்பாடு, மின்னணு ஆளுமை, தொழில் நுட்ப மூலாதார முனைதல், தொழில் நுட்ப மேம்பாடு, குழும மேம்பாடு, ஏற்றுமதி வளர்ச்சி, மற்றும் வழிமுறைகள், சீரான உற்பத்தி, செய்தி மற்றும் தகவல் தொடர்பு தொழில் நுட்ப நிலைகள் ஆகிய இனங்களில் பயிற்சி அளிக்கப்படும்.

## 6. தொழில் நுட்ப ஆதரவு :

### 6.1 தொழில் நுட்ப மற்றும் திறன் மேம்பாடு மற்றும் நவீனப்படுத்தலுக்கான உதவி

#### 6.1.1. சிறு கருவி மையங்கள்

மைய அரசின் தேசிய உற்பத்தி திறன் மேம்பாட்டுத் திட்டம் வாயிலாக செயல்படுத்தப்படவுள்ள சிறு கருவி மையங்கள் அமைக்க அதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் தேவைக்கு ஏற்ப, மாநில அரசு வழங்கும்.

அத்துடன் சம்பந்தப்பட்ட குழுமம் / சங்கங்கள் சிறு கருவி மையங்கள் தகுதியான இடங்களில் அமைக்க முன்வந்தால் அதற்கு தேவையான நிதி உதவியை, திட்ட மதிப்பில் 25 விழுக்காடு அளவில் அதிக பட்சமாக ரூ.1 கோடி வரை அரசு வழங்கும். சம்பந்தப்பட்ட குழுமம் / சங்கங்கள் இதற்கான நிலத்தினை ஏற்பாடு செய்ய வேண்டும்.

#### 6.1.2. உற்பத்தி நிறுவனங்களின் போட்டியிடும் திறமையை அதிகரித்தல்

மைய அரசின் தேசிய உற்பத்தித் திறன் மேம்பாட்டுத் திட்டம் வாயிலாக செயல்படுத்தப்பட உள்ள கீழ்க்கண்ட திட்டங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் தேவைக்கேற்ப மாநில அரசு வழங்கும்.

1. சிக்கன உற்பத்தி உத்திகளை நடைமுறைப்படுத்துவதற்கான தேசிய அளவிலான திட்டம்

2. உற்பத்தித் துறையில் தகவல் மற்றும் தகவல் தொடர்புக்கான தொழில் நுட்பங்களை மேம்படுத்துதல்.

3. சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் தொழில் நுட்பம் மற்றும் தரம் உயர்த்துதலுக்கு உதவுதல்.

4. சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் தொழில் முனைவு மற்றும் மேலாண்மை வளர்ச்சிக்கு உதவுதல்.

5. உற்பத்தி நிறுவனங்களுக்கு பொருட்களின் வடிவமைப்பு மேம்படுத்தும் நோக்கோடு வடிவமைப்பு அமைத்தல்.

6. உற்பத்தி நிறுவனங்களின் போட்டியிடும் திறனை தர மேலாண்மை அளவைகள் மற்றும் தரமுள்ள தொழில் நுட்ப கருவிகள் மூலம் மேம்படுத்துதல்.

7. அறிவுசார் சொத்துரிமையில் முதலீட்டை ஈர்க்க தேசிய அளவிலான பிரச்சார இயக்கம்.

8. குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான உதவிகள்

### 6.1.3 தொழில் குழும மேம்பாட்டுத் திட்டம் :

அரசு குழும வளர்ச்சியை ஊக்குவித்து மைய அரசுத் திட்டங்களின் அதிகபட்ச பலன்களை அந்நிறுவனங்கள் அடைய உதவும்.

அத்துடன் சம்பந்தப்பட்ட குழுமம் / சங்கங்கள் தகுதியான இடங்களில் பொது வசதி மையங்கள் அமைக்க முன்வந்தால் அதற்கு தேவையான நிதி உதவியை, திட்ட மதிப்பில் 25 விழுக்காடுஅளவில் அதிக பட்சமாக ரூ.1 கோடி வரை அரசு வழங்கும். சம்பந்தப்பட்ட குழுமம் / சங்கங்கள் இதற்கான நிலத்தினை ஏற்பாடு செய்ய வேண்டும்.

### 6.1.4. பின்முனை வட்டி மானியம்

மைய அரசின் கடன் உத்திரவாதத்துடன் இணைந்த முதலீட்டு மானிய உதவித் திட்டத்தின் விதிமுறைகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நன்கு உறுதிசெய்யப்பட்ட மற்றும் மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பம் கொண்ட இயந்திரங்களை நவீனப்படுத்தலுக்காக நிறுவும் குறு ,சிறு மற்றும் நடுத்தர தொழில் உற்பத்தி நிறுவனங்களுக்கு அவற்றால் பெறப்பட்ட ரூபாய் 100 லட்சம் வரையுள்ள கடன்களின் மீது 3 விழுக்காடு, (நிறுவனம் ஒன்றுக்கு அதிகபட்சமாக ஐந்தாண்டு காலத்தில் மொத்த வட்டி மானியம் ரூ.10 இலட்சம்) பின்முனை வட்டி மானியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

### 6.1.5. தொழில் நுட்ப வளர்ச்சி நிதி

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் உற்பத்திப் பிரிவில் தூய்மையான மற்றும் / அல்லது சக்தி திறனுள்ள அல்லது தகவல் தொழில் நுட்பம் தொடர்புடைய தொழில் நுட்பங்களை ஏற்படுத்த குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன சங்கங்கள் ஆதரவுடன் அண்ணா பல்கலைக்கழகம், கிண்டி வளாகம், நிகர் நிலை பல்கலைக் கழகங்கள், பொறியியல் கல்லூரிகள், தொழில் நுட்ப பயிலகங்கள், இந்திய தொழில் நுட்ப கல்வி நிலையம் மற்றும் மாநிலத்திலுள்ள புகழ் வாய்ந்த மைய அரசு நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கான செலவுக்காக ஒவ்வொரு ஆண்டும் கூடுதல் தொகைகள் பெறும் வகையில் ரூ.25 இலட்சம் தொகையுடன் ஒரு நிதியம் ஏற்படுத்தப்படும்.

இந் நிதியத்தின் மூலம் ரூ.2.5 இலட்சம் வரை அல்லது திட்ட மதிப்பீட்டில் 50 விழுக்காடு இவற்றில் எது குறைவானதோ அத்தொகை ஆதரவு தொகையாக வழங்கப்படும். இந்த உதவியைப் பெற சம்பந்தப்பட்ட திட்டத்திற்கு தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரின் முன் ஒப்புதல் பெற்றிருக்க வேண்டும்.

மேலும் முதலில் வந்தவர்க்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் குறு உற்பத்தி நிறுவனங்களின் தொழில் முனைவோர்களுக்கு தேவைப்படும் ஒட்டு மொத்த செயல்பாட்டுத் திறமை தொடர்பான 100 ஆய்வுகளுக்கான செலவில் 50 விழுக்காடு, ஒவ்வொரு ஆண்டும் இந் நிதியம் வழங்கும். அத்தகைய ஆய்வு ஆறு வேலைநாட்கள் கொண்டதாகவும் இருக்க வேண்டும். இதற்கான செலவு விவரப் பட்டியல்களை தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் நிர்ணயிப்பார். இந்நிதியம் சிட்கோ நிறுவனத்தால் நிர்வகிக்கப்படும். இதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் தனியே வெளியிடப்படும்.

### 6.1.6 தொழில் நுட்ப வணிக சேவை வசதி வளர்ப்பகங்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களில், தானியங்கி தொழில், சிறு கருவிகள் மையங்கள், உணவு பதப்படுத்துதல் ஆகிய தொழில் பிரிவுகளில் நவீன உற்பத்தி உத்திகள் மற்றும் வடிவமைப்பு மேம்பாடு இவற்றைப் புகுத்தும் நோக்கோடு அமைக்கப்படும் "திறன்மிகு மையங்கள்" மற்றும் "தொழில் நுட்ப வணிக சேவை வசதி வளர்ப்பகங்கள்" அமைக்க தேவையான நிதியுதவியை மையம் ஒன்றுக்கு அதிக பட்சமாக ரூ.50 இலட்சம் வரை அரசு வழங்கும்.

### 6.1.7. அறிவுசார் சொத்துரிமைக்கான மானிய உதவி

தொழிற் பயன்பாட்டுக்கு உதவும் புதுமை கண்டுபிடிப்புகளை மேற்கொள்ளும் தகுதியுடைய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுடன் இணைந்த அல்லது தனித்து இயங்கும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனங்கள் இவைகளின் புதிய கண்டுபிடிப்புகளுக்கான "உரிமைக்காப்பு" பதிவு செய்யும் செலவில் 50 விழுக்காடு அல்லது ரூபாய் 2.00 லட்சம் இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படும். இம் மானிய உதவி உள்நாட்டில் அல்லது

வெளிநாட்டில் பதிவு செய்யப்படும் அனுமதிக்கப்பட்ட உரிமைக் காப்புகள் தொடர்பான பதிவுக்கட்டணம் மற்றும் முதல் தடவை செலுத்தும் பராமரிப்பு தொகை ஆகியவற்றிற்கும் கிடைக்கும்.

அத்துடன் குறு , சிறு மற்றும் நடுத்தர தொழில் உற்பத்தி நிறுவனங்களுக்கு வணிக குறியீடு பதிவு செய்யும் செலவில் 50 விழுக்காடு அல்லது ரூபாய் 25,000/– இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படும். இந்த ஆதரவு உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் பதிவு செய்யப்படும் அனுமதிக்கப்பட்ட உரிமைக் காப்புகள் தொடர்பான பதிவுக்கட்டணம் அல்லது முதல் தடவை செலுத்தும் பராமரிப்பு தொகை ஆகியவற்றிற்கும் கிடைக்கும்.

### 6.1.8. குறிப்பிட்ட வகை தொழில்களுக்கான தொழில் நுட்ப மேம்பாட்டு திட்டம்

கயிறு, கையால் செய்யப்படும் தீப்பெட்டி, கூட்டுறவு தேயிலை உற்பத்தி மற்றும் ஜவ்வரிசி உற்பத்தி ஆகிய தொழில் பிரிவுகளுக்கான தொழில் நுட்ப மேம்பாடு மற்றும் உற்பத்திச் சிக்கன நடவடிக்கைகளுக்கு உதவ சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### 6.2. சான்றளித்தல் மற்றும் பரிசோதனை

உலகமயமாக்கலால் தொழில் துறையினர் குறிப்பாக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் சந்தித்து வரும் போட்டிகளை சமாளிக்கும் நோக்குடன் அவர்களது பரிசோதனை தேவைகளை சந்திக்கும் பொருட்டு தொழில் வணிக இயக்குநர் கட்டுப்பாட்டில் இயங்கும் பரிசோதனை மற்றம் மின் மருத்துவ கருவிகள் பழுது பார்க்கும் மையங்கள், நவீன கருவிகள் நிறுவுவதன் மூலம் மேம்படுத்தப்படும். இம்மையங்களுக்கு பொது துறை மற்றும் தனியார் துறை கூட்டு முயற்சி அடிப்படையில் தன்னாட்சி வழங்குவதற்கான வாய்ப்புகள் ஆராயப்படும்.

தொழில் வணிக இயக்குநரகம், மைய அரசு திட்டத்தின் கீழ் ஆய்வு மையங்கள் அமைக்க குறு , சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் வளர்ச்சி அமைப்பின் அனுமதி கேட்டு விண்ணப்பிக்கும் நேர்விற்கான திட்ட ஆவணங்கள் தயாரிப்பு மற்றும் மைய அரசுடன் தொடர்பு கொள்ளும் வசதி ஆகியவற்றை ஏற்படுத்திட உதவும்.

### 6.3 செயல்திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி

செயல் திறன் மேம்பாடு மற்றும் பயிற்சிக்காக தொழில் நிறுவன சங்கங்களுடன் இணைந்து கீழ்க்காணும் திட்டங்கள் வகுக்கப்படும்

- வளர்ந்து வரும் தொழில் நுட்பங்களான தகவல் தொழில் நுட்பம், தகவல் தொழில் நுட்பம் சார்ந்த சேவைகள், அறிவு சார் செயற்பாடு ஒப்படைப்பு, வணிக செயற்பாடு ஒப்படைப்பு, நிறுவன செயற்பாடு ஒப்படைப்பு, உயிரி தொழில் நுட்பம் ஆகிய தொழில்களின் தொழில் முனைவோர் மேம்பாட்டிற்கென சிறப்பு தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி திட்டங்கள் பல்வேறு கால அளவுகளில் நிதி நிறுவனங்கள், தொழில் நிறுவன சங்கங்கள், தொழில் மற்றும் சேவை துறையில் பிரபலமான பயிற்சி

நிறுவனங்கள் மூலம்  பொது மற்றும் தனியார் கூட்டமைப்பு முயற்சி வாயிலாக செயல்படுத்தப்படும்.

- தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரின் முன் அனுமதியுடன் குறு ,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன சங்கத்தினர் மாநிலத்தில் உள்ள புகழ் வாய்ந்த பயிற்சி நிறுவனங்களுடன் கூட்டாக, படித்து வேலையில்லாதவர்களுக்கு பயன் தரும் வகையில் நடத்தப்படும் சிறப்பு குறுகிய கால பயிற்சி வகுப்புக்கான பயிற்சி கட்டணத்தில்  50 விழுக்காடு திரும்ப வழங்கப்படும். அவ்வாறு பயிற்சி பெற்றவர்களுக்கு உடனடி வேலை அளிப்புக்காக உத்திரவாதம் அளிக்கும் சம்பந்தப்பட்ட சங்கத்திற்கு இம்மானியம் வழங்கப்படும்.
- தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரின் முன் அனுமதியுடன் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களில் பணிபுரிந்து வரும் தொழிலாளர்களின் செயல் திறனை மேம்படுத்த  குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் சங்கத்தினர் நடத்தும் குறுகிய கால பயிற்சி வகுப்புகளுக்கான பயிற்சி கட்டணத்தில் 50 விழுக்காடு திரும்ப வழங்கப்படும்.
- இவை தவிர அரசின் பிற துறைகளைச் சார்ந்த முகமைகளில் மேற்கொள்ளப்படும் செயல்திறன் வளர்ச்சி நடவடிக்கைகளின் நன்மைகள் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பெற்றிடும் வகையில் தேவையான விவரங்களை திரட்டி எங்கெங்கு தேவையோ அங்கெல்லாம் அத்தகவல்கள் விரிவாகக் கிடைப்பதை உறுதி செய்ய தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் நடவடிக்கை மேற்கொள்வார்.

## 7. தகவல் மற்றும் சந்தை ஆதரவு

### 7.1. சந்தைப்படுத்துதலுக்கான ஆதரவு, கருத்தரங்குகள் மற்றும் பொருட்காட்சிகள்

- தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் சட்டம் 1998–ன் வரையறைகளின்படி உள்நாட்டு குறு  மற்றும் சிறு தொழில் நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்யும் இனங்களுக்கு 15 விழுக்காடு விலை முன்னுரிமை அளிக்கப்படும்.
- மாநில அரசு அவ்வப்போது அறிவிக்கை வெளியிடும் இனங்களுக்கு கொள்முதல் முன்னுரிமை வழங்கப்படும்.
- பிணை வைப்புத் தொகை செலுத்துவதில் குறு  மற்றும் சிறு நிறுவனங்களுக்கு விதிவிலக்குச் சலுகை தொடரும்.
- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன சங்கங்கள்  பொருட் காட்சிகள் நடத்துவதற்கு ஆகும் செலவில் விழா அரங்கத்திற்கான கட்டணத்தில் 50 விழுக்காடு (சென்னையில் நடத்தப்படும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கு அதிகபட்சமாக ரூபாய் 5 இலட்சம் மற்றும் இதர மாவட்டங்களில் நடத்தப்படும் நிகழ்ச்சி ஒன்றுக்கு

அதிகபட்சமாக ரூ.1.00 இலட்சம் வரை) திரும்ப தரப்படும் அடிப்படையில் மானியமாக வழங்கப்படும்.

- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன சங்கங்கள் பிற மாநிலங்களில் நடத்தப்படும் பொருட்காட்சிகளில் பங்கு கொள்ள ஆகும் செலவினை ஈடுசெய்தல் என்ற அடிப்படையில் அரங்கு வாடகையில் 50 விழுக்காடு, அதிகபட்சம் ஒவ்வொரு பொருட்காட்சிக்கும் ரூபாய் 5 இலட்சம் வரை, திரும்ப தரப்படும் அடிப்படையில் மானியமாக வழங்கப்படும்.

- தொழில் முனைவோரின் குழுமங்கள் தங்களது உற்பத்திப் பொருளை பொதுவான பெயர் அல்லது வணிகச் சின்னத்தில் விற்பனை செய்ய திட்டம் தீட்டப்பட்டு ஆதரவு அளிக்கப்படும்.

- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் சங்கங்கள் சார்பாக, மைய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் வளர்ச்சி அமைப்பிடம் உதவி கேட்டு விண்ணப்பிக்கும் கீழ்க்குறிப்பிட்டுள்ள நேர்வுகளில் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அலுவலகத்தில் இயங்கும் தகவல் மையம் தேவையான ஆவணங்கள் தயாரித்தல் மற்றும் தொடர்பு கொள்ளுதல் ஆகியவற்றில் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவன வளர்ச்சி நிலையத்துடன் இணைந்து உதவும்.

(அ) அகில உலகப் பொருட்காட்சிகளில் பங்கு பெறுதல் – சிறு நிறுவனங்கள் பங்கு பெறும் பொருட்காட்சிக்கான அரங்கு வாடகை மற்றும் பொருட்களை கப்பலில் அனுப்ப ஆகும் செலவு ஆகியவற்றுக்கு முழு மானியம் வழங்குதல்.

(ஆ) சிறு தொழில்களுக்கான விற்பனை மேம்பாடு உதவி – தொழில் பிரதிநிதித்துவ குழுக்களில் மற்றும் பொருட்காட்சிகளில் சிறு தொழில் முனைவோர் கலந்து கொள்ளுவதற்குச் சென்று வருவதற்கான விமானக் கட்டணத்தில் 90 விழுக்காடு நிதி உதவி செய்தல் மேலும் பிரசாரத்திற்கான விளம்பர பொருட்களைத் தயாரிக்க ஆகும் செலவில் 25 விழுக்காடு வரை நிதி உதவி செய்தல்.

(இ) குறிப்பான தொழிற் பிரிவு தொடர்பான ஆய்வு – குறிப்பான தொழிற் பிரிவு தொடர்பான ஆய்வுக்கு (ரூபாய் 2 லட்சம் வரை) மற்றும் உற்பத்தி பொருள் குவிப்பிற்கு எதிரான வழக்குகளில் எதிர்வாதிடல் (செலவில் 50 விழுக்காடு அல்லது ரூபாய் 1 லட்சம் வரை அளித்தல்).

(ஈ) துணை ஒப்பந்த இணைப்பகங்கள் அமைக்கும் திட்டம் – துணை ஒப்பந்த இணைப்பகங்கள் அமைப்பதற்குத்தேவையான வன்பொருள் கொள் முதல் செய்ய ஒரு முறை மானியமும் அதற்கு பின்னர் முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஆகும் நடைமுறை செலவில் குறைந்து வரும் சதவீத அடிப்படையில் முறையே 50 விழுக்காடு, 30 விழுக்காடு மற்றும் 10 விழுக்காடு, அதிகபட்சமாக முறையே ரூபாய் 1.25 இலட்சம், ரூபாய் 0.75 இலட்சம் மற்றும் ரூ.0.25 இலட்சத்திற்கு மிகாமலும் ஒரு இணைப்பகத்திற்கு அதிக பட்சம் ரூபாய் 1.57 இலட்சம் வரையிலும் இணை மானியமாக வழங்குதல்.

## 8. கட்டுப்பாடுகள் நீக்கம் மற்றும் எளிதாக்குதல்

### 8.1 பொது விண்ணப்ப படிவம்

தொழில்கள் தொடங்க விண்ணப்பிக்கும் பொது விண்ணப்ப படிவம் மற்றும் தொழிலாளர் துறையால் ஒப்புதலளிக்கப்பட்ட பொது விவர அறிக்கை உடனடியாக பின்பற்றப்படும்.

### 8.2. சுய சான்றளிக்கும் வசதி

சட்ட பூர்வமான தேவைகளை நிறைவு செய்வதில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் சுய சான்றளிக்கும் வசதி பின்பற்றுவது படிப்படியாக கொண்டு வரப்படும். பதிவுக்கான சுய சான்று அளித்தல், ஆய்வு சதவீதம் மற்றும் விதியற்ற முறையில் சரிபார்ப்பு போன்றவற்றிற்கான வழிகாட்டு நெறிமுறைகள் தனியே வெளியிடப்படும். ஒவ்வொரு மாவட்டத்திலும் அத்தகைய கட்டுப்பாடுகளை அகற்றுவதற்கு தகுதியான நிறுவனங்கள் ஒற்றைச் சாளரக் குழுவினால் கீழ்க்கண்ட முறையில் கண்டறியப்படும்.

- கடந்த 3 ஆண்டுகளில், வரி, தொழிற்சாலை மற்றும் தொழிலாளர் நலன் சம்பந்தப்பட்ட அறிக்கைகளை தவறாமல் சமர்ப்பித்தல்.
- கடந்த 5 ஆண்டுகளில் வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன்கள் திருப்பிச் செலுத்தல் அல்லது விற்பனை வரி செலுத்துதல் அல்லது மின்கட்டணப் பட்டியலுக்கான தொகை செலுத்துதல் அல்லது உள்ளாட்சி அமைப்புகளுக்கு சேர வேண்டிய தொகைகளை செலுத்துவதில் தவணை காலந்தவறாமை அல்லது அரசு முகமைகளுடன் வழக்கு தொடருதல் ஆகிய முன் நிகழ்வுகள் இல்லாமை.
- விற்பனை வரி / மதிப்பு கூட்டுதல் வரி, மின் கட்டணம் அல்லது உள்ளாட்சி அமைப்புகள் அல்லது பிற மாநில முகமைகளுக்குச் செலுத்த வேண்டிய தொகை நிலுவைகள் அல்லது அரசு முகமைகளுடன் வழக்கு தொடர்ந்து நிலுவையில் உள்ள இனங்கள் ஏதும் இல்லாதிருத்தல்.

### 8.3 தொழிற்சாலைகளை துவங்குவதற்கான ஒற்றைச் சாளர தீர்வு சட்டம்

அரசின் புதிய தொழிற்கொள்கை 2007ல் தொழிற்சாலைகளை துவங்குவதற்கான ஒப்புதல்களை வழங்குவதற்காக, மாநில மற்றும் மாவட்ட அளவிலான ஒற்றை சாளர குழுக்களுக்கு முறையான அதிகாரம் மற்றும் கால வரம்புகள் வழங்கும் வகையில் "தொழில் வழிநடத்துதல் சட்டம்" ஒன்று இயற்றப்படுவது பற்றி பரிசீலிக்கப்படும் எனவும், முதலீடு செய்வோர் ஒற்றைச் சாளர அனுமதிக்காக நேரடியாக விண்ணப்பிக்க இயலும் வகையிலும், அனுமதிகள் வழங்கப்படுவதை கண்காணிப்பதற்கும் தொழில் நடைமுறையை எளிதாக்கும் "மின் ஆளுகை முறை" ஒன்று அறிமுகப்படுத்தப்படும் எனவும் அரசு அறிவித்துள்ளது.

தொழிற்சாலைகளை துவங்குவதற்கான ஒப்புதலை வழங்குவதற்கான மாநிலம் மற்றும் மாவட்ட அளவிலான ஒற்றை சாளர குழுக்களுக்கு முறையான அதிகாரம் மற்றும் ஒப்புதலை வழங்க கால வரம்புகள் வழங்கும் வகையில் "ஒற்றை சாளர தீர்வு சட்டம்" ஒன்றை அரசு இயற்றும் .

## 9 நிருவாகச் சீரமைப்பு

### 9.1 தொழில் வணிகத்துறையின் நிருவாக அமைப்பைச் சீரமைத்தல்

மாறிவரும் சூழ்நிலையை சமாளித்தல் மற்றும் வசதியாக்கும் பணிகளை மேற்கொள்ளும் நோக்குடன் தொழில் வணிகத்துறையின் நிர்வாக அமைப்பு தக்க முறையில் பலப்படுத்தப்பட்டு அதற்கான ஆதாரங்கள் மேம்படுத்தப்படும். குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் கொள்கையில் அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்களை முனைந்து செயல்படுத்தும் நோக்குடன் தொழில் வணிக ஆணையகரம் மற்றும் மாவட்ட தொழில் மையங்களை வலுப்படுத்த தேவையான அனைத்து உதவிகளும் அளிக்கப்படும்.

### 9.2 வர்த்தகம் மற்றம் தொழில் நுட்ப தகவல்களை ஒருங்கிணைத்தல்

மாவட்ட தொழில் மையங்கள் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அலுவலகத்தில் உள்ள தகவல் மையத்துடன் இணைக்கப்பட்டு வலுப்படுத்தப்படும். மேலும் அத்தகவல் மையம் டான்ஸ்டியா எப்.என்.எப் சேவை நிலையம், இந்திய தொழில்கள் கூட்டமைப்பின் (சி.ஐ.ஐ.), தொழில் நுட்ப மேம்பாட்டு மையம், குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவன வளர்ச்சி நிலையம் மற்றம் பிற தகவல் மையங்களுடன் இணைக்கப்படும்.

மாவட்டத் தொழில் மையங்களின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வர்த்தகம், உரிமைக்காப்பு சான்றளிப்பு நடைமுறைகள் மேலும் வணிக வளர்ச்சி திட்டங்களை உருவாக்குதல் பற்றிய பயிற்சி அளிக்கப்படும்.

இத்தகவல் மையத்தின் சில பணிகள் வெளி முகமைகளிடமிருந்து பெறப்பட்டு குறு மற்றும் சிறு நிறுவனங்களின் தொழில் முனைவோர்களுக்குத் தேவையான அனைத்து தகவல்களையும் ஒரே இடத்தில் கிடைக்கச் செய்யவும், வணிகம், அறிவு சார் சொத்துரிமை சான்றளித்தல் மற்றும் அவை சார்ந்த தொழில் நுட்ப பிரச்சனைகள், தகவல் தொழில் நுட்பத்தை உற்பத்தி அல்லது சந்தைப்படுத்துதலில் பயன்படுத்துதல் ஆகியவற்றுக்கும் இம்மையம் உதவும்.

மேலும் இத்தகைய தகவல் மையமானது

- பொது மக்கள் மத்தியில் பல இடங்களில் கிடைக்கும் பொதுவான தகவல்களை திரட்டவும் பதிவு செய்து கொண்ட தொழில் முனைவோர் கேட்கும்போது அவற்றை இலவசமாக வழங்கவும் தக்க ஏற்பாடுகள் செய்யும்.
- குறு மற்றும் சிறு நிறுவனங்களின் கோரிக்கைகளின் பேரில் தகவல் மையத்தால் பட்டியலிடப்பட்ட ஆலோசகர்களுடன் கலந்தாய்வு செய்ய சந்திப்புக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டண அடிப்படையில் சென்னையில் நேரடியாகவும் மாவட்டங்களில் வீடியோ கான்பரன்ஸ் முறையிலும் கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யும்.
- குறிப்பிட்ட தொழில் நுட்பம் மற்றும் மேலாண்மை தொடர்புடைய முகமை பற்றிய ஆலோசனைகள் வழங்குதல், அறிமுகப்படுத்துதல் மற்றும் குறிப்பான நிறுவன நிருவாகம் தொடர்புடைய நிகழ்வுகள் மீது கலந்துரையாடலுக்காக அணுகும் தேவை ஏற்படும்போது உதவும்.
- குறு மற்றும் சிறு நிறுவனங்கள் மற்றும் நிறுவன சங்கங்கள் சார்பாக தர மேலாண்மை (QMS) ISO 9000 சான்று பெறுதல் மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மை (EMS) ISO 14001 சான்று பெறுதல் தொடர்பான செலவுகளை திரும்பப் பெறும் உதவித் திட்டத்தின் கீழ், மைய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் வளர்ச்சி அமைப்பிடம் உதவி கேட்டு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களுக்குத் தேவையான ஆவணங்கள் தயாரிக்க உதவும் மற்றும் அவை சார்பாக மைய அரசுடன் தொடர்பு கொள்ளும். (தர மேலாண்மை (QMS) ISO 9000 சான்று பெறுதல் மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மை (EMS) ISO 14001 சான்று பெறுதல் தொடர்பான செலவுகளை திரும்ப பெறும் ஊக்க உதவித் திட்டத்தின் கீழ் இதற்கான செலவில் 75 சதவீதம் அல்லது ரூபாய் 75,000/– இவற்றில் எது குறைவோ அத்தொகை மைய அரசால் வழங்கப்படுகிறது.)
- குறு நிறுவனங்கள், மைய அரசு மற்றும் மைய அரசின் முகமை மூலம் உதவிகள் பெற தகுதியான எந்த உதவி திட்டத்தின் கீழும் விண்ணப்பிக்க விரும்பும் நேர்வுகளில் உதவி செய்யும்.

## 9.3. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் கொள்கையில் அளிக்கப்படும் மானியங்கள் மற்றும் ஊக்குதவி திட்டங்களை நிருவகித்தல்

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் கொள்கையில் அளிக்கப்படும் மானியங்கள் மற்றும் ஊக்குதவி திட்டங்கள் தொழில் வணிகத்துறை மூலம் நிருவகிக்கப்படும். இந்த மானியங்கள் மற்றும் ஊக்குதவி திட்டங்களை செயல்படுத்துதல் குறித்த விளக்க குறிப்புகள் அனைவரது வழிகாட்டுதலுக்காக தனியாக வெளியிடப்படும்.

## 9.4. குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான வாரியம் அமைத்தல்

மைய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம் 2006ன் விதிகளுக்குட்பட்டு மாநில அரசு சிறு தொழில் நிறுவன வாரியத்தினை குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான வாரியமாக மாற்றி அமைக்கும். இவ்வாரியம் மாநிலத்திலுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வளர்ச்சிக்கான கொள்கைகள் மற்றும் திட்டங்களை சேர்ந்தாய்வு மற்றும் பரிந்துரை செய்யும்.

## 10. கொள்கை செயல்படுத்துதலைக் கண்காணித்தல்

### 10.1. அதிகாரம் பெற்ற குழு

ஊரகத் தொழில் துறை அமைச்சரின் தலைமையில், கீழ் குறிப்பிடப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட ஒரு அதிகாரம் பெற்ற குழு மாநில அரசால் நியமிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| ஊரகத் தொழில் அமைச்சர் | – | தலைவர் |
| செயலாளர், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை | – | உறுப்பினர் |
| செயலாளர், தொழில் துறை (அ) பிரதிநிதி | – | உறுப்பினர் |
| செயலாளர், நிதித்துறை (அ) பிரதிநிதி | – | உறுப்பினர் |
| செயலாளர், வணிக வரித் துறை (அ) பிரதிநிதி | – | உறுப்பினர் |
| வணிக வரித்துறை ஆணையர் | – | உறுப்பினர் |
| தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் | – | அமைப்பாளர் |
| மேலாண்மை இயக்குநர், சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் | – | உறுப்பினர் |
| உறுப்பினர் (பகிர்மானம்), தமிழ்நாடு மின்சார வாரியம் | – | உறுப்பினர் |
| மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் | – | உறுப்பினர் |

இக்குழு கீழ்க்கண்ட அதிகாரங்களைப் பெற்றிருக்கும் :

(1) அரசுத் துறைகள் மற்றும் நிறுவனங்கள் கொள்முதல் மற்றும் விலை முன்னுரிமை கொள்கையை பின்பற்றுகின்றனவா என காலாண்டுக்கு ஒருமுறை கண்காணிக்கும்.

(2) காலாண்டுக்கு ஒரு முறை கீழ்க்கண்ட ஆய்வுகளை மேற்கொள்ளுதல்

அ. சிட்கோ, தொழில் வணிக இயக்குநர் கட்டுப்பாட்டில் உள்ள (துறை மற்றும் கூட்டுறவு) மற்றும் தனியார் துறையால் மேம்படுத்தப்பட்ட தொழிற் பேட்டைகளில் போதுமான அளவு மற்றும் நிலையான தண்ணீர், மின்சார விநியோகம் மற்றும் சுற்றுப்புறச் சுகாதார வகையிலான நெறிமுறைகளைப் பின்பற்றுதல்.

ஆ. மாவட்டங்களில் உள்ள ஒன்றைச் சாளர அமைப்பின் செயல்பாடு.

இ. குறு மற்றும் சிறு நிறுவன வசதியாக்க குழுக்களின் செயல்பாடு.

ஈ. சுய சான்று அளிப்பதற்கான நடைமுறைகளை எளிமைப்படுத்துல் மற்றும் அதன் முன்னேற்றம்.

மேலே (அ) முதல் (ஈ) வரையிலான பொருட்கள் பற்றிய விவாதங்களில் கலந்து கொள்ள தமிழ்நாடு குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரிய நிர்வாக இயக்குநர், சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரிய நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் தலைவர், நகர் மற்றும் ஊரமைப்புத்துறை இயக்குநர், நகராட்சி நிர்வாக ஆணையர் ஆகியோர் அழைக்கப்படுவார்கள். திட்டங்களினால் கிடைக்கும் நன்மைகள் சென்றடைதல், நடைமுறைகளை எளிதாக்குதல் போன்றவற்றைத் தொடர்ந்து மதிப்பீடு செய்யவும் எளிமையாக்குதலை அறிமுகப்படுத்தவும் அதிகாரம் பெற்ற குழுவானது, வெளி முகமை அமைப்புகளின் உதவியை பெற்றுக் கொள்ளலாம்.

(3) ஊரகத் தொழில் அமைச்சர் தலைமையிலான அதிகாரம் பெற்ற குழு மற்றும் மாநில அளவிலான நிறுவனங்களுக்கிடையான குழு (SLIIC) இணைந்த கூட்டத்தில் காலாண்டு முறையில் கீழ்க்கண்டவற்றை கண்காணிக்கும்.

(அ) குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான கடன் தேவைகள், அத்தேவைகள் நிறைவு செய்யப்படுதல் ஆகியவற்றை ஒட்டு மொத்தமாகவும் தனியொரு நிறுவனத்தின் கடன் தேவை மற்றும் வழங்கல் பற்றி தனித்தனியாகவும் ஆய்வு செய்தல்.

(ஆ) தொழிற்பேட்டைகள் அமைக்கும் தனியார் முகமைகளுக்கு கிடைக்கும் கடன் வசதி நிலவரம்.

(இ) கடன் உத்திரவாத நிதித் திட்டத்தின் கீழ் குறு நிறுவனங்கள் பயனடைதல் குறித்த முன்னேற்றம்.

(ஈ) மாநில மற்றும் மைய அரசின் பயனாளிகள் சம்பந்தப்பட்ட குழும வளர்ச்சி திட்டங்களின் செயல்பாடுகள்.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன சங்கங்களின் பிரதி நிதிகள் அவர்கள் சம்பந்தப்பட்ட பொருட்கள் அதிகாரம் பெற்ற குழுவால் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் போது இக்குழு கூட்டங்களுக்கு சிறப்பு அழைப்பாளராக அழைக்கப்படுவர்.

## இணைப்பு–1

## நலிவுற்ற குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை புனரமைக்கும் கொள்கை

### 1. அறிமுகம்

1. நலிவுற்ற நிறுவனங்களை புனரமைப்பது, விரைவான பகுப்பாய்வு, வழங்கப்பட வேண்டிய நிவாரணம் குறித்த துரிதமான முடிவுகள் மற்றும் ஒருங்கிணைந்த கூட்டு முயற்சியுடன் கூடிய செயல்படுத்துதல் சார்ந்ததாகும்.

2. அவ்வப்போது இந்திய ரிசர்வ் வங்கி வெளியிடும் விளக்கத்தின் அடிப்படையில் நிறுவனங்களின் நலிவுற்ற தன்மை வரையறுக்கப்படும்.

3. கீழே குறிப்பிடப்படும் சலுகைகள் குறு , சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களாக தொழில் முனைவோர் பதிவறிக்கை (பகுதி–2) எண் பெற்றுள்ள உற்பத்தி நிறுவனங்களுக்கு மட்டுமே பொருந்தும்.

4. இக்கொள்கையானது (மூலப் பொருட்களை பதப்படுத்தும் பணியில் ஈடுபடும் மற்றும் மூலப் பொருள்கள் மற்றும் உற்பத்தி செய்த பொருள்களை எடுத்துச் செல்லும் சில்லரைப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனங்களை உள்ளடக்கிய) குறு, சிறு மற்றும் கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படாத நடுத்தர உற்பத்தி நிறுவனங்களுக்கு மட்டுமே பொருந்தும்.

5. மேலே கூறப்பட்ட நோக்கத்தை அடைவதற்கான கொள்கை வழிமுறைகள் மற்றும் நிர்வாக அமைப்பு விவரங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

### 2. நிருவாக அமைப்பு :

மாவட்ட தொழில் மையங்கள், இந்திய ரிசர்வ் வங்கி அமைக்கும் மாநில அளவிலான நிறுவனங்களுக்கிடையிலான குழு (ஸ்லிக்) மற்றும் மாநில அளவிலான நிறுவனங்களுக்கு இடையிலான குழுவின் துணைக் குழு, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மற்றும் அதிகாரம் பெற்ற மாநில அளவிலான புனரமைப்புக் குழு (எஸ்.எல்.ஆர்.சி) ஆகியன புனரமைப்புத் திட்டங்களை செயல்படுத்தும் நிறுவனங்களாக இருக்கும். அதிகாரம் பெற்ற மாநில அளவிலான புனரமைப்புக் குழுவின் அமைப்பு விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| செயலர், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை | – | தலைவர் |
| செயலாளர், நிதித்துறை (அ) பிரதிநிதி | – | உறுப்பினர் |
| செயலாளர், தொழில் துறை (அ) பிரதிநிதி | – | உறுப்பினர் |
| செயலாளர், வணிக வரித்துறை (அ) பிரதிநிதி | – | உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் | – | அமைப்பாளர் |
| தலைவர், சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் | – | உறுப்பினர் |
| உறுப்பினர் (பகிர்மானம்), தமிழ்நாடு மின்சார வாரியம் | – | உறுப்பினர் |
| நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் | – | உறுப்பினர் |
| சம்பந்தப்பட்ட மாவட்டத் தொழில் மையங்களின் பொது மேலாளர்கள் | – | உறுப்பினர் |

## 3. விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கும் மாவட்டத் தொழில் மையங்கள் அவற்றை ஆய்வு செய்தவற்குமான நடைமுறைகள்.

**3.1.** தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், பகுப்பாய்வுப் பணியை ஒப்படைக்கும் பொருட்டு ஆலோசனை நிறுவனங்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல் ஒன்றைத் தயாரிப்பதுடன் (அதில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகமும் இடம் பெறலாம்) ஒவ்வொரு மூன்று ஆண்டுகளிலும் குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கான தரப்பட்டியல் நிர்ணயம் செய்யும். மேலும், புனரமைப்புக்கு விண்ணப்பிக்கும் நிறுவனம் சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பத்தையும், அவ்விண்ணப்பதாரர்கள் நிறுவனம், நலிவுற்ற நிறுவனங்கள் நிறைவு செய்ய வேண்டிய நிபந்தனைகளை நிறைவு செய்கின்றனவா என மதிப்பீடு செய்திட, மாவட்டத் தொழில் மையத்தின் பொது மேலாளர் ஆரம்ப கட்ட ஆய்வு மேற்கொள்வதற்குத் தேவையான ஒரு கணினி மென்பொருள் தயார் செய்யும்.

**3.2.** புனரமைப்பு தொடர்பான விண்ணப்பம் சமர்ப்பிக்க விரும்பும் நிறுவனம் உரிய விண்ணப்பத்துடன் (1) திரும்பச் செலுத்த தக்கதல்லாத கட்டணமாக ரூ.1000/–த்தையும் (2) பகுப்பாய்வு பணி மேற்கொள்வதற்கான கட்டணத்தின் 25 விழுக்காட்டையும் மாவட்ட தொழில் மையம் / சென்னையிலுள்ள மண்டல தொழில் இணை இயக்குநர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

**3.3.** நிறுவனங்களிடமிருந்து தேவையான விளக்கங்களையும் புள்ளி விவரங்களையும் பெற்று தொடர்புடைய மென்பொருளை பயன்படுத்தி ஆய்வு செய்த பின்னர் சம்பந்தப்பட்ட நிறுவனம் நலிவுற்ற நிலையில் இல்லையென்பது தெரியவந்தால் அந்த நேர்வுகளுக்கு மாவட்ட தொழில் மையத்தின் பொது மேலாளர் பகுப்பாய்வுப் பணிக்கு வசூலிக்கப்பட்ட கட்டணத்தை திருப்பிக் கொடுத்து கோப்பினை முடித்து விடலாம். தொழில் முனைவோர் குறைந்த பட்சம் 6 மாத காலம் இடைவெளிக்குப் பின் மீண்டும் புதியதாக மனுச் செய்து கொள்ளலாம்.

**3.4.** நிறுவனம் நலிவுற்றுள்ளது என்பது ஆரம்ப கட்ட ஆய்வில் தெரிய வந்தால் பகுப்பாய்வு செய்து அறிக்கை தயார் செய்து சமர்ப்பிக்க தகுதியானவை என தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தால் பட்டியலிடப்பட்ட பகுப்பாய்வு அமைப்பு ஒன்றிடம்,

45 நாட்களில் அறிக்கை செய்யும் பொருட்டு விண்ணப்பத்தை மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் ஒப்படைத்திட வேண்டும். ஆலோசகர் கேட்கும் கூடுதல் விவரங்கள் அனைத்தையும் வழங்குமாறும் ஆய்வுக்கான எஞ்சிய நிலுவை 75 விழுக்காடு கட்டணத்தை ஆலோசகருக்கு செலுத்துமாறும் விண்ணப்பதாரரை பொது மேலாளர் அறிவுறுத்த வேண்டும். இத்தகைய விண்ணப்பம் பெறப்பட்டு ஆலோசகரின் ஆய்வில் உள்ளது பற்றி தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் மற்றும் வணிக வரித்துறை துணை ஆணையருக்கும் மாவட்டத் தொழில் மையத்தின் பொது மேலாளர் தெரிவிக்க வேண்டும். ஆலோசகர் நியமனம் பற்றிய விவரம் தெரிய வந்து 21 நாட்களுக்குள் முந்தைய மாதம் வரையிலான நிறுவனம் செலுத்த வேண்டிய நிலுவை கேட்புத் தொகை, செலுத்த வேண்டிய வரி தொடர்பான கூறுகள் மின்கட்டண நிலுவை மற்றும் செலுத்த வேண்டிய வட்டி தொடர்பான விவரங்களை மாவட்ட தொழில் மைய பொது மேலாளருக்கும், ஆலோசருக்கும் அவர்கள் அனுப்ப வேண்டும். வணிக வரித்துறையின் துணை ஆணையர் நிலுவை வசூல் தொடர்பான கட்டாய வசூல் முறைகளை 6 மாதங்களுக்குத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பார்.

3.5. ஆய்வறிக்கை பெறப்பட்டவுடன் மாவட்ட தொழில் மையத்தின் பொது மேலாளர் மாநில அளவிலான நிறுவனங்களுக்கிடையிலான குழு (SLIIC) வின் துணைக்குழு உறுப்பினர்களுக்கு தெரிவித்து மேற்படி துணைக் குழுவின் அடுத்த கூட்டத்தில் விவாதிக்கப்பட வேண்டிய பொருள்களில் சேர்க்க தக்க நடவடிக்கைகளை மேற்கொள்வார். இத்துணைக் குழுவானது ஒவ்வொரு இரண்டு மாத கால இடைவெளியில், பொதுவாக ஒவ்வொரு இரண்டாவது மாதத்தின் முதல் வேலை நாளில் கூடும். ஆலோசகர், வணிகவரித்துறை இணை ஆணையர் மற்றும் தமிழ்நாடு மின்வாரியத்தின் கோட்டப் பொறியாளர் ஆகியோர் மாவட்டத் தொழில் மையத்தின் பொது மேலாளரால் இக்கூட்டத்திற்கு அழைக்கப்படுவர்.

## 4. நிவாரணம் அளிப்பது தொடர்பாக குழுவிற்கான வழிகாட்டுதல்கள்

4.1 மாநில அளவிலான நிறுவனங்களுக்கிடையிலான குழுவின் துணைக்குழு பகுப்பாய்வு அறிக்கையில் உள்ள முடிவுகளை ஆய்ந்து மாநில அளவிலான புனரமைப்பு குழுவிற்கும் (எஸ்.எல்.ஆர்.சி) மாநில அளவிலான நிறுவனங்களுக் கிடையிலான குழுவிற்கும் (SLIIC) எந்த வகையில் குறிப்பான உதவி வழங்கலாம் என பரிந்துரை செய்யும். அவ்வாறு பரிந்துரை செய்யும் போது மாநில அளவிலான நிறுவனங்களுக்கிடையிலான குழுவிற்கு அளிக்கப்பட்ட பரிந்துரைகள், இது தொடர்பாக நடைமுறையில் உள்ள ரிசர்வ் வங்கியின் கொள்கை நெறிமுறைகளுக்குட்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மாநில அளவிலான புனரமைப்புக் குழுவுக்கு அனுப்பப்படும் பரிந்துரையானது குறிப்பிட்ட ஒவ்வொரு தனி நேர்வின் தன்மையைப் பொருத்ததாக இருக்கும்.

**4.2.** மாநில அளவிலான புனரமைப்புக் குழு கீழ்க்கண்ட வரையறைக்குள் புனரமைப்பு உதவிகள் வழங்கலாம். அவை சம்பந்தப்பட்ட தனி நேர்வின் தகுதி அடிப்படையிலானதாக இருக்க வேண்டும்.

(அ) நிலுவையில் உள்ள விற்பனை வரி / மதிப்புக் கூடுதல் வரி மற்றும் அவற்றின் மீதான வட்டி (அதிகாரம் பெற்ற குழு உதவித் திட்டத்தை அங்கீகரிக்கும் நாள் வரையிலான தொகைகள்) ஆகியவற்றை மென் கடனாக மாற்றுதல். அக்கடன் தொகையானது 9 விழுக்காடு வட்டியுடன் நான்காவது ஆண்டு தொடக்கத்திலிருந்து நான்கு ஆண்டுகளில் சமமாத தவணைகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு திரும்பச் செலுத்த வேண்டும். அக்கடன் தொகை மீது முதல் மூன்று ஆண்டுகளுக்கு வட்டி ஏதும் விதிக்கப்பட மாட்டாது. இந்த சலுகையானது சம்பந்தப்பட்ட நிறுவனம் நலிவுற்ற நிலையில் ஏற்பட்ட நிலுவைத் தொகைகளுக்கு மட்டுமே பொருந்தும். நிறுவனம் நலிந்த நிலையில் இல்லாத முன் ஆண்டுகளுக்கான நிலுவை வரி மற்றும் வட்டி நிலுவை ஆகியவற்றிற்குப் பொருந்தாது. அத்தகைய நிலுவைகள் முழுவதுமாக செலுத்தி தீர்க்கப்பட வேண்டும் என்பதை உதவித் திட்டம் அனுமதிப்பது தொடர்பான ஆணையில் முன் நிபந்தனையாக சேர்க்க வேண்டும்.

(ஆ) நலிவுற்ற சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு, அவை வாங்கியுள்ள புனரமைப்பு / இணைப்புக்கடன் தொகையில் 4 விழுக்காடு வட்டி மானியமாக இரண்டு ஆண்டுகளுக்கு ஒப்புதல் அளித்தல்.

(இ) மைய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் சட்டம் 2006–ன் படி அறிவிக்கப்படவுள்ள தொழிலை விட்டு வெளியேறும் கொள்கையை செயல்படுத்துதல்.

(ஈ) புனரமைப்பு காலத்தில் பங்கு ஈட்டுத் தொகை வழங்குதல் மற்றும் இலாபத்தை பிரிப்பதை ஒழுங்குபடுத்துதல்.

(உ) நலிவுற்ற நிறுவனங்களாக அறிவிக்கப்பட்டவற்றிற்கு அரசுடைமை நிறுவனங்களின் கொள்கைப்படியான ஒரு தவணை தீர்வு திட்டத்தை செயல்படுத்துதல்.

(ஊ) விற்பனை வரி மற்றும் மதிப்புக் கூட்டுதல் வரிக்கான (மாநில அளவிலான புனரமைப்பு குழுவின் நிவாரண திட்டத்திற்கு ஒப்பளிப்பு ஆணை வெளியிடும் நாள் வரையிலான) நிலுவை வட்டியை நிர்ணயம் செய்தல் மற்றும் புனரமைப்பு கொள்கைப்படியான சலுகை உதவிகளைப் பயன்படுத்தியும் இலாபகரமாக இயங்கும் திறன் அற்ற மற்றும் புனரமைக்க லாயக்கற்ற நிறுவனங்கள் என முடிவு செய்யப்பட்டு அவை செலுத்த வேண்டிய நிலுவையில் உள்ள தொகைகளை தள்ளுபடி செய்ய அரசுக்குப் பரிந்துரை செய்தல். இத்தகைய பரிந்துரையானது நிறுவன உரிமையாளர்,

தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய நிலுவை கூலித் தொகை சட்டபூர்வமான தொழிலாளர் நல அலுவலர்களுக்கு கொடுக்க வேண்டிய தொகை, பணியிலிருந்து வெளியேற்றப்பட்ட தொழிலாளர்களுக்குச் சட்டப்படியாக சேர வேண்டிய நிவாரணத் தொகை மற்றும் நிலுவையில் உள்ள விற்பனை வரி மற்றும் மின் கட்டண நிலுவைகளை, மாநில அளவிலான புனரமைப்பு குழுவின் ஆணை வெளியிடப்பட்ட மூன்று மாத காலத்திற்குள் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் செய்யப்படும்.

(எ) புனரமைப்பு உதவித் திட்டங்களில் ஒன்றாக சேர்க்கப்பட்டிருப்பின் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் மின்சக்தி திறனை குறைக்க ஆணையிடுதல்.

**4.3.** மாநில அளவிலான புனரமைப்புக் குழு தனது தீர்ப்புரிமையின்படி, இலாபத்தில் இயங்கும் தன்மை அற்றதாக முடிவு செய்யப்படும் நலிந்த குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் கடன்களை வேறு குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனம் கீழே குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்குட்பட்டு ஏற்றுக் கொள்ளுமாறு அனுமதிக்கலாம்.

**(அ).** பொறுப்பில் எடுத்துக் கொள்ள அனுமதியளித்து ஆணை வெளியிடப்பட்ட மூன்று மாத காலத்திற்குள் மூடப்பட்ட நிறுவனத்தை திறப்பது.

**(ஆ).** பொறுப்பில் எடுக்கப்பட்ட நிறுவனம் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைகளை செலுத்துவதற்கு வங்கிகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய ஆதாரம் சமர்ப்பித்தல் மற்றும் தொழிலாளர்களுக்கு, சட்டபூர்வ அதிகாரம் உடைய துறை மற்றும் அரசு முகமைகள் ஆகியவற்றிற்கு எடுக்கப்பட்ட நிறுவனம் செலுத்த வேண்டிய தொகைகளை செலுத்த ஏற்பாடு செய்தல்.

**(இ).** பொறுப்பில் எடுக்கப்பட்ட நிறுவனத்தின் உபரியாக உள்ள நிலத்தை விற்பதற்கு கடன் வழங்கியவர்கள் மற்றும் அரசின் முன் ஆணைகள் பெறுவதற்கான அனுமதி பெறவும், அவ்வாறு உபரி நிலத்தை விற்றதால் கிடைத்த தொகைகளைக் கொண்டு, பொறுப்பில் எடுக்கப்பட்ட நிறுவனம் செலுத்த வேண்டிய தொழிலாளர்கள், சட்டபூர்வமாக அரசு முகமைகள், அரசு மற்றும் வங்கிகளுக்குச் சேர வேண்டிய நிலுவைத் தொகைகளை செலுத்தி முடிக்க சம்மதம் தெரிவித்தல். மேற்படி அனுமதிகள் உறுதிப்படுத்தப்படும் வரை, விற்பனை மதிப்புக்கு ஈடான தொகை அவ்வாறு ஆணையிடப்படும் வரை ஒரு தனி கணக்கில் வரவு வைக்கப்படும்.

**(ஈ).** பொறுப்பில் எடுத்துக் கொள்ளும் நிறுவனம் சமர்ப்பிக்கும் விண்ணப்பத்தின் பேரில், மாநில அளவிலான புனரமைப்புக் குழு நிலுவையில் உள்ள விற்பனை வரி / மதிப்புக் கூட்டுதல் வரி மற்றும் அவற்றின் மீதான வட்டி (மாவட்ட அளவிலான புனரமைப்புக்குழு நிவாரணத் திட்டம் ஒப்பளிக்கும் ஆணை வெளியிடும் நாள்

வரையிலானது) ஆகியவற்றின் 75 விழுக்காட்டை மென் கடனாக மாற்றி ஆணையிடலாம். அக்கடன் தொகையானது 9 விழுக்காடு வட்டியுடன் நான்காவது ஆண்டு தொடக்கத்திலிருந்து நான்கு ஆண்டுகளில் சமமாத தவணைகள் அடிப்படையில் கணக்கிடப்பட்டு திரும்பச் செலுத்தப்பட வேண்டும். அக்கடன் தொகை மீது முதல் மூன்று ஆண்டுகளுக்கு வட்டி ஏதும் விதிக்கப்பட மாட்டாது. மாநில அளவிலான புனரமைப்புக் குழுவின் ஆணைப்படி பொறுப்பில் எடுத்துக் கொள்ளும் நிறுவனம், கடனாக மாற்றப்படாமல் உள்ள நிலுவை விற்பனை வரி / மதிப்பு கூட்டுதல் வரி மற்றும் வட்டி ஆகியவற்றை செலுத்த வேண்டும் என்பது மென் கடன் பெறுவதற்கான முன் நிபந்தனையாக இருக்கும்.

**4.4.** இலாபகரமாக இயங்கும் தன்மை உடைய, புனரமைப்புக்கு ஏற்றதாக கருதப்படும் நிறுவனங்கள் அல்லது இலாபகரமாக இயங்கும் தன்மையற்று புனரமைக்கு தகுதியற்ற நிறுவனங்கள் என்று மாநில அளவிலான புனரமைப்பு குழு எடுக்கும் உத்தேச முடிவுகள் அடுத்து நடைபெறும் மாநில அளவிலான நிறுவனங்களுக்கு இடையிலான குழுவின் கூட்டத்தின் கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். மாவட்ட அளவிலான புனரமைப்புக்குழு அரசுக்குச் சேர வேண்டிய கடன் தொடர்பாக வழங்க முன் வரும் சலுகைகள், மாநில அளவிலான நிறுவனங்களுக்கிடையிலான குழுவின் முடிவு மற்றும் சம்பந்தப்பட்ட நபர்கள், வங்கிகள் மற்றும் கடன் வழங்கிய நிறுவனங்களின் ஏற்பு என்ற நிபந்தனைக்கு உட்பட்டதாகும். மாநில அளவிலான புனரமைப்புக்குழு, புனரமைப்பு தொடர்பான வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்ட சலுகைகளுக்கு அதிகமாக எந்த பரிந்துரையும் செய்யாது.

**4.5.** மாநில அளவிலான நிறுவனங்களுக்கிடையிலான குழுவால், ஒரு நிறுவனம் குறித்து ஏற்புடைய முடிவு எடுக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட வங்கி புனரமைப்புக்கான செயல்பாட்டு அட்டவணையை குறிப்பிடும் பட்சத்தில், மாநில அளவிலான புனரமைப்புக் குழுவின் உத்தேச முடிவானது ஒரு ஆணையாக வெளியிடப்பட்டு உறுதி செய்யப்படும். மாநில அளவிலான நிறுவனங்களைக்கிடையிலான குழு வங்கிகளுக்கு அல்லது நிதி நிறுவனங்களுக்குச் சேர வேண்டிய நிலுவைக் கடன், தொடர்பாக ஏற்புடைய நிவாரணம் வழங்குவது பற்றி அட்டவணை ஏற்படுத்த இயலாத நிலையில் இருந்தாலோ, மாநில அளவிலான புனரமைப்புக் குழு குறிப்பாக நிர்ணயித்த 3 மாத காலத்திற்குள் சம்பந்தப்பட்ட வங்கி அல்லது நிதி நிறுவனம் சலுகைகள் வழங்குவது குறித்த ஆணைகள் வெளியிடப்படாவிட்டாலோ மாநில அளவிலான புனரமைக்குழு ஏற்றுக் கொண்ட சலுகைகளை தாமே திரும்பப் பெறப்பட்டதாகிவிடும்.

## 5. கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்பு

**5.1.** சலுகை திட்டங்கள் உரியவாறு செயல்படுத்தப்படுகின்றவா என்பதை கண்காணிக்கவும் சம்பந்தப்பட்ட தொடர்புடைய நபர்கள் ஏற்றுக் கொண்ட ஒப்பந்தப்படி செயல்படுவது பற்றியும்

மாநில அளவிலான புனரமைப்பு குழுவுக்கும் நிறுவனங்களுக்கிடையிலான குழுவுக்கும் விபரங்கள் அளிக்க தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில் ஒரு தனிப்பிரிவு தொடங்கப்படும். புனரமைப்புக்கான சலுகைகள் மற்றும் அவற்றை பெற உள்ள நிபந்தனைகள் மற்றும் அவற்றை பின்பற்றுவதால் ஏற்படும் விளைவுகள் குறிப்பிடப்பட்ட ஒரு பட்டியலை தயாரித்து அவற்றை தவறாமல் பின்பற்றுவது குறித்த ஒரு நிபந்தனையற்ற உறுதிமொழியை, தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் சம்பந்தப்பட்ட நிறுவன உரிமையாளரிடமிருந்து பெறும். பயனாளி நிறுவனம் நிபந்தனைகளை நிறைவு செய்யத் தவறும் போது வழங்கப்பட்ட எல்லா சலுகைகளும் திரும்பப் பெறப்பட்டு, அவை வழங்குவதற்கு முன்பு இருந்த பழைய நிலையை அடைவதால், நடைமுறையில் இருக்கும் சட்டப்படி அனுமதியளிக்கப்பட்டுள்ள வலுக்கட்டாயமான வசூல் நடவடிக்கைளைத் தொடரும் நிலைமை ஏற்படும்.

**5.2.** நிருவாகச் செலவுகள் மற்றும் மாநில அளவிலான புனரமைப்புக் குழுக் கூட்டங்கள் நடத்தி ஒருங்கிணைப்பதற்கான செலவுகளுக்காக வழங்கப்படும் ஒட்டு மொத்த உதவித் தொகையாக ரூபாய் 5 லட்சமும் கண்காணிப்புக்காக ஒவ்வொரு நிறுவனத்திடமிருந்தும் ரூபாய் 5000/– ஆண்டுக் கட்டணமாக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் வசூல் செய்து கொள்ள அனுமதிக்கப்படும்.

## 6. புனரமைப்பு நிதி

**6.1.** நலிவுற்ற நிறுவனங்களை புனரமைப்பதற்காக ஒரு புனரமைப்பு நிதி உருவாக்கப்பட்டு தொடக்கத்தில் அந்நிதி தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரால் நிருவகிக்கப்படும். மாநில அளவிலான புனரமைப்புக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் கூடுதல் தொகைகள் இந்நிதியத்திற்கு கால முறையில் வழங்கப்படும். அந்நிதியத்திலிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள இனங்களுக்கு நிதியுதவி வழங்கப்படும்.

1) குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் இயங்கும் தன்மையுள்ளவை என கண்டறியப்பட்டால் அவற்றிற்கான பகுப்பாய்வுக்கான செலவினம் 75 விழுக்காடு தொகையை செலுத்துதல்.

2) குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு புனரமைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக புனரமைப்பு / இணைப்புக்கடன் ரூ.15 இலட்சம் வரை வழங்கப்படுவதற்கு வட்டி மானியமாக 4 விழுக்காடு, இரு ஆண்டுகளுக்கு வழங்குதல்.

3) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு நிருவாக செலவிற்கென ஆண்டு ஒன்றிற்கு ஒட்டுமொத்த உதவித் தொகையாக ரூ.5 இலட்சம் வழங்குதல்.

## இணைப்பு–2 (அ)

## ஒப்புதல் அளிக்கப்பட்ட தொழில் பூங்காவின் முக்கிய அம்சங்கள்

**1. ஒப்புதல் அளிப்பதற்கான வரையறை**

அ) விண்ணப்பதாரர் சட்டபூர்வமான முறையில் குறைந்த பட்சம் 50 ஏக்கர் நிலம் வைத்திருத்தல்.

ஆ) உற்பத்தி மற்றம் சேவை தொழிலகங்கள் அமைப்பதற்காக பயன்படுத்தப்பட வேண்டும்.

இ) குறைந்தபட்சம் 20 குறு மற்றும் 30 சிறு தொழில் நிறுவனங்கள் அமைக்க வழிவகைகள் கொண்டதாக இருக்க வேண்டும்.

ஈ) அமையும் இடத்தின் பரப்பில் நன்செய் நிலப்பரப்பு 10 விழுக்காட்டிற்கு மேல் இருக்க கூடாது.

**2. உற்பத்தி தொடர்பான செயல்முறைகளுக்கான பரப்பு : மொத்தப்பரப்பில் 70 விழுக்காட்டிற்கு குறைவாக இல்லாமல் இருத்தல்.**

- உற்பத்தி தொழிலுக்கான காலிமனைகள்
- தொழிற் பயன்பாட்டுக்காக கட்டப்பட்ட தொழிற்கூடங்கள்

**3. உற்பத்தி தொடர்பு இல்லாத செயல்களுக்கான பரப்பு : மொத்தப் பரப்பில் 30 விழுக்காட்டிற்கு மிகாமல் இருத்தல்.**

- ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு சோதனை சான்றளித்தல் / பயிற்சி மையம்
- உற்பத்தி தொடர்பான செயல்பாடுகளுக்கு தேவையான வியாபார உதவிக்கான அலுவலக இடம்
- மருத்துவ மனைகள்
- பொதுக் கிடங்குகள்
- எடைமேடைகள்

## இணைப்பு–2 (ஆ)

### அங்கீகரிக்கப்பட்ட அடிப்படைக் கட்டமைப்பு பற்றிய பட்டியல்

கீழ்க்கண்ட தொழில் அடிப்படைக் கட்டமைப்புத் திட்டங்கள் இக்கொள்கையின் அடிப்படையில் செயல்படுத்தப்படும் ஊக்க உதவித் திட்டங்களின் கீழ் பயன்பெற தகதியானவையாகும்:

1. தொழிற் பூங்காங்களுக்கு செல்லும் புதிய சாலைகள்
2. தொழிலகங்கள் குவிந்திருக்கும் இடங்களில் ஊறு விளைவிக்கும் கழிவுகளை சுத்திகரிக்கும் மற்றும் கழிவு நீக்கம் செய்யும் பொது வசதிகள்.
3. தொழிலகங்கள் குவிந்திருக்கும் இடங்களில் பொது கழிவுகள் சுத்திகரிப்பு மற்றும் கழிவு நீர் மறு சுழற்சி இயந்திரங்கள்.
4. ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, சோதனை செயல்திறன் மேம்பாடு மையங்கள்.
5. பொதுவான பொருள் வைப்புக் கிடங்குகள் அமைத்தல்.
6. எடைமேடைகள் அமைத்தல்.
7. தொழிற் பேட்டைகளுக்குள் மின் கட்டுமான அடிப்படைக் கட்டமைப்பு வசதி.

## இணைப்பு–3

## மாநிலத்தில் உள்ள பின்தங்கிய வட்டாரங்கள்

### கோயம்பத்தூர் மாவட்டம்

1 அன்னூர்
2 குடிமங்கலம்
3 கிணத்துக்கடவு
4 பொங்கலூர்
5 சுல்தான்பேட்டை

### கடலூர் மாவட்டம்

6 அண்ணாகிராமம்
7 கம்மாபுரம்
8 காட்டுமன்னார்கோவில்
9 குமராட்சி
10 குறிஞ்சிப்பாடி
11 மங்களூர்
12 மேல்புவனகிரி
13 நல்லூர்
14 பரங்கிப்பேட்டை

### தர்மபுரி மாவட்டம்

15 அரூர்
16 காரிமங்கலம்
17 மொரப்பூர்
18 நல்லம்பள்ளி
19 பாலக்கோடு
20 பாப்பிரெட்டிபட்டி
21 பெண்ணாகரம்

### திண்டுக்கல் மாவட்டம்

22 குஜிலியம்பாறை
23 நத்தம்
24 நிலக்கோட்டை
25 ஒட்டன்சத்திரம்
26 ரெட்டியார்சத்திரம்
27 சாணார்பட்டி
28 தொப்பம்பட்டி
29 வடமதுரை
30 வேடசந்தூர்

### ஈரோடு மாவட்டம்

31 அந்தியூர்
32 குண்டடம்
33 தாளவாடி

### காஞ்சிபுரம் மாவட்டம்

34 அச்சரப்பாக்கம்
35 சித்தாமூர்
36 குன்றத்தூர்
37 லத்தூர்
38 மதுராந்தகம்
39 திருக்கழுக்குன்றம்
40 உத்திரமேரூர்
41 வாலாஜாபாத்

### கன்னியாகுமரி மாவட்டம்

42 இராஜாக்கமங்கலம்
43 திருவட்டாறு
44 தோவாளை

**கரூர் மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 45 | அரவக்குறிச்சி | 48 | கிருஷ்ணராயபுரம் |
| 46 | கே.பரமத்தி | 49 | தாந்தோனி |
| 47 | கடவூர் | 50 | தோகைமலை |

**கிருஷ்ணகிரி மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 51 | பர்கூர் | 55 | சூளகிரி |
| 52 | காவேரிப்பட்டினம் | 56 | தளி |
| 53 | கெலமங்கலம் | 57 | ஊத்தங்கரை |
| 54 | மாத்தூர் | 58 | வேப்பனப்பள்ளி |

**மதுரை மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 59 | அலங்காநல்லூர் | 65 | டி.கல்லுபட்டி |
| 60 | செல்லம்பட்டி | 66 | திருமங்கலம் |
| 61 | கள்ளிக்குடி | 67 | திருப்பரங்குன்றம் |
| 62 | கொட்டாம்பட்டி | 68 | உசிலம்பட்டி |
| 63 | மதுரை கிழக்கு | 69 | வாடிப்பட்டி |
| 64 | சேடப்பட்டி | | |

**நாகை மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 70 | கீழையூர் | 75 | சீர்காழி |
| 71 | கீழ் வேலூர் | 76 | தலைஞாயிறு |
| 72 | கொள்ளிடம் | 77 | திருமருகல் |
| 73 | குத்தாலம் | 78 | வேதாரண்யம் |
| 74 | செம்பனார்கோவில் | | |

**நாமக்கல் மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 79 | எலச்சிபாளையம் | 84 | மோகனூர் |
| 80 | எருமைப்பட்டி | 85 | நாமகிரிப்பேட்டை |
| 81 | கபிலர்மலை | 86 | புதுச்சத்திரம் |
| 82 | கொல்லிமலை | 87 | வெண்ணந்தூர் |
| 83 | மல்லசமுத்திரம் | | |

**நீலகிரி மாவட்டம்**

| | |
|---|---|
| 88 | கூடலூர் |
| 89 | கோத்தகிரி |
| 90 | ஊட்டி |

**அரியலூர் மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 91 | ஆண்டிமடம் | 94 | செந்துறை |
| 92 | அரியலூர் | 95 | டி. பழூர் |
| 93 | ஜெயங்கொண்டம் | 96 | திருமானூர் |

**பெரம்பலூர் மாவட்டம்**

97 ஆலத்தூர்
98 வேப்பந்தட்டை
99 வேப்பூர்

**புதுக்கோட்டை மாவட்டம்**

100 அன்னவாசல்
101 அரிமளம்
102 ஆவுடையார்கோவில்
103 கந்தர்வகோட்டை
104 கரம்பக்குடி
105 குன்னான்டார்கோவில்
106 மணல்மேல்குடி
107 பொன்னமராவதி
108 திருமயம்
109 திருவரங்குளம்
110 விராலிமலை

**இராமநாதபுரம் மாவட்டம்**

111 போகளூர்
112 கடலாடி
113 கமுதி
114 மண்டபம்
115 முதுகுளத்தூர்
116 நயினார்கோவில்
117 ஆர்.எஸ்.மங்கலம்
118 திருப்புல்லாணி
119 திருவாடனை

**சேலம் மாவட்டம்**

120 அயோத்தியாபட்டணம்
121 காடையாம்பட்டி
122 கொங்கனாபுரம்
123 மேச்சேரி
124 ஓமலூர்
125 பெத்தநாயக்கன்பாளையம்
126 தலைவாசல்
127 தாரமங்கலம்
128 ஏற்காடு

**சிவகங்கை மாவட்டம்**

129 இளையாங்குடி
130 காளையார்கோவில்
131 கல்லல்
132 கண்ணன்குடி
133 மானாமதுரை
134 எஸ்.புதூர்
135 சிங்கம்புணரி
136 சிவகங்கை
137 திருப்பத்தூர்
138 திருப்புவனம்

**தஞ்சாவூர் மாவட்டம்**

139 அம்மாபேட்டை
140 பூதலூர்
141 மதுக்கூர்
142 ஒரத்தநாடு
143 பாபநாசம்
144 பேராவூரணி
145 சேதுபாவாசத்திரம்
146 திருப்பனந்தாள்
147 திருவையாறு
148 திருவோணம்

**தேனி மாவட்டம்**

149 ஆண்டிபட்டி
150 சின்னமனூர்
151 கம்பம்
152 கே. மயிலாடும்பாறை

**தூத்துக்குடி மாவட்டம்**

153 ஆழ்வார்திருநகரி
154 கருங்குளம்
155 கயத்தாறு
156 கோவில்பட்டி
157 ஒட்டபிடாரம்
158 புதூர்
159 சாத்தான்குளம்
160 ஸ்ரீவைகுண்டம்
161 திருச்செந்தூர்
162 உடன்குடி
163 விளாத்திகுளம்

**திருச்சி மாவட்டம்**

164 லால்குடி
165 மணச்சநல்லூர்
166 மணப்பாறை
167 மருங்காபுரி
168 முசிறி
169 புள்ளம்பாடி
170 தாத்தையங்கார்பேட்டை
171 தொட்டியம்
172 துறையூர்
173 உப்பிலியாபுரம்
174 வையம்பட்டி

**திருநெல்வேலி மாவட்டம்**

175 ஆலங்குளம்
176 கடையம்
177 குருவிகுளம்
178 மேலநீலிதநல்லூர்
179 நாங்குனேரி
180 பாப்பாக்குடி
181 இராதாபுரம்

**திருவள்ளூர் மாவட்டம்**

182 எல்லாபுரம்
183 கடம்பத்தூர்
184 பள்ளிப்பட்டு
185 பூண்டி
186 ஆர்.கே. பேட்டை
187 சோழவரம்
188 திருவாலங்காடு

**திருவண்ணாமலை மாவட்டம்**

189 அன்னக்காவூர்
190 ஆரணி
191 செங்கம்
192 சேத்துப்பட்டு
193 செய்யாறு
194 ஜவ்வாதுமலை
195 கலசப்பாக்கம்
196 கீழ்பெண்ணாத்தூர்
197 பேரணமல்லூர்
198 போளூர்
199 புதுப்பாளையம்
200 தண்டராம்பட்டு
201 தெள்ளாறு
202 துரிஞ்சாபுரம்
203 வந்தவாசி
204 வேம்பாக்கம்
205 மேற்கு ஆரணி

**திருவாரூர் மாவட்டம்**

206 கொடவாசல்
207 கொரடாச்சேரி
208 கோட்டூர்
209 முத்துபேட்டை
210 நீடாமங்கலம்
211 திருத்துறைப்பூண்டி
212 வலங்கைமான்

**வேலூர் மாவட்டம்**

213 அணைக்கட்டு
214 ஆற்காடு
215 ஜோலார்பேட்டை
216 கே.வி.குப்பம்
217 கந்திலி
218 காவேரிப்பாக்கம்
219 நாட்ராம்பள்ளி
220 நெமிலி
221 பேரணாம்பட்டு
222 சோளிங்கர்
223 திமிரி
224 திருப்பத்தூர்

**விழுப்புரம் மாவட்டம்**

225 சின்னசேலம்
226 செஞ்சி
227 கள்ளக்குறிச்சி
228 கல்வராயன்மலை
229 காணை
230 கண்டமங்கலம்
231 மைலம்
232 மரக்காணம்
233 மேல்மலையனூர்
234 முகையூர்
235 ஒலக்கூர்
236 ரிஷிவந்தியம்
237 சங்கராபுரம்
238 திருக்கோயிலூர்
239 திருநாவலூர்
240 திருவெண்ணெய்நல்லூர்
241 தியாகதுர்கம்
242 உளுந்தூர்பேட்டை
243 வல்லம்
244 வானூர்
245 விக்கிரவாண்டி

**விருதுநகர் மாவட்டம்**

246 காரியாப்பட்டி
247 நரிக்குடி
248 சாத்தூர்
249 திருச்சுழி
250 வெம்பக்கோட்டை
251 வத்திராயிருப்பு

## இணைப்பு–4

## மானியம் பெற தகுதியில்லாத நிறுவனங்கள் / தொழில்கள்

1. சர்க்கரை ஆலைகள்
2. சாராய வடிப்பு சார்ந்த தொழில்கள்
3. மொலாசஸ் / பிரித்தெடுக்கப்பட்ட எரிசாராயம் / மாற்றம் செய்யப்பட்ட எரிசாராயம் இவற்றை மூலப்பொருளாகக் கொண்டு மதுபானம் தயாரித்தல்
4. பாப்கார்ன் மற்றும் ஐஸ்கிரீம் தயாரித்தல்
5. உரம் தயாரித்தல்
6. கலப்பு உரம் தயாரித்தல்
7. கனிமச் சுரங்கம் மற்றும் கனிமங்கள் வெட்டியெடுத்தல்
8. இரும்பு மற்றும் உருக்காலை
9. பீடி, சிகரெட், புகையிலை, சுருட்டு, குட்கா, மற்றும் புகையிலை சார்ந்த பொருட்கள் உற்பத்தி
10. அனைத்து வகை மர அறுவை ஆலைகள்
11. குறு, சிறு மற்றும் நடுத்தர சேவை நிறுவனங்கள்
12. சிமெண்ட் ஆலைகள்
13. ஜவுளி ஆலைகள் ( நூற்பாலை மற்றும் பின்னலாடை உட்பட)
14. மாவு அரைவைத் தொழில்
15. உணவு விடுதிகள்
16. சமையல் எண்ணெய் மற்றும் கரைப்பான்களை உபயோகித்து எண்ணெய் பிரித்தெடுத்தல்
17. அரிசி ஆலை
18. அலுமினிய உருக்காலை
19. கால்சியம் கார்பைடு
20. உணவுக்காக கால்நடைகளை வெட்டும் தொழில்

21. வெல்லம் தயாரித்தல்

22. நிழற்படம் எடுத்தல் மற்றும் வண்ண நிழற்படம் தயாரித்தல்

23. ஒளி அச்சு நகல் எடுத்தல்

24. செய்முறை மற்றும் மதிப்பு கூட்டுதல் மருந்து பொருட்கள் மற்றும் வேதியியல் பொருட்களை மறு பொட்டலம் கட்டுதல்

25. செயற்கை மற்றும் எதிர்வினை புரியக்கூடிய சாயங்கள்

26. பட்டாசு தொழில்

27. வான்வெளியில் ஓசோன் படலத்தை குறைக்கும் பொருட்களை தயாரிக்கும் தொழில்கள்

28. மின்சலவை தொழில்

29. செங்கல் தொழில் (சிமெண்ட் ஹாலோ பிளாக், இயந்திரங்கள் மூலம் மற்றும் நிலக்கரி சாம்பலிலிருந்து தயாரிக்கப்படும் செங்கல் தவிர)

30. கோழிப் பண்ணை

31. காப்பி கொட்டை வறுத்தல் மற்றும் அரைத்தல்

32. கடிகாரம் பழுதுபார்த்தல்

33. ஒளி மற்றும் ஒலி நாடா பதிவு செய்தல்

34. சயனைடு

35. எரிகாரம்

36. பொட்டாசியம் குளோரைடு

37. நைலான் இழை

38. ரேயான் இழை

39. பாலியஸ்டர் இழை

40. அரசு அறிவிக்கக் கூடியவாறான ஏனைய பிற நிறுவனங்கள் / தொழில்கள்

**குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை**

(தமிழ்நாடு அரசு)

தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை – 600 009.
தொலைபேசி 2567 1476, தொலை நகல் 044 – 2567 5453
மின்னஞ்சல் : sindsec@tn.gov.in